உ

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 4 } 1905ஆ மேமீ { புத்தகம் 5

வித்தை.—X.

[முன் தொடர்ச்சி]

முன் சஞ்சிகையில் முதல் மூன்று பாரங்களின் கல்வியபி
விருத்தியைப்பற்றிப் பேசினோம். இச்சமயம் ஹைஸ்கூலை
சார்ந்த நான்கு, ஐந்து, ஆறு பாரங்களைப்பற்றிப் பேசு… ச்
சில வருஷங்களுக்கு முன் ஹைஸ்கூலில் இரண்டு வகுப்ப… வாம்.
இருந்தன. இரு வருஷப்பயிற்சி போதாதென்று ஒரு… க்களே
அதிகப்பட்டது. அவ்வகுப்புக்கள் விஷயமாய் முற்கா… வருஷம்
நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால் தற்கால நி… தற்கால
த்தியானதாகத் தோற்றவில்லை. தற்கால நான்… லைமை விரு
முற்கால மூன்றும் பாரமும் ஒரே தன்மையது… ம் பாரமும்
லாம். லோயர் செக்கண்டரி பரிக்ஷையே இதற்கு… என்று கூற
ணம் எனத் தோற்றுகிறது. அப்பரீக்ஷையினிற் முக்கி… கார
களும் பிள்ளைகளும் மிதத்துக்கு மிஞ்சிய மதிப்பு… ம் பெற்றோர்
தால் அநேகம் மாணாக்கர்கள் அப்பரீக்ஷையில் வைத்திருப்ப
ணம் வாசிக்கிறார்களே ஒழிய அறிவுக்கென்று மு… தேறும் வண்
வாசிக்கிற வழக்கத்தை விட்டுவிட்டார்கள். உ… ற்காலம்போல்
ளும் மானேஜர்களும் பெற்றோர்கள் வசப்பட்ட… ாத்தியாயர்க
பரீக்ஷையைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள் களாய் அப்

சிற்சிலர்

அதனைப் பூராவாக வெறுத்தாலும் "ஊருடன் கூடிவாழ்" என்பதைச் சிரமேற்கொண்டு ஒழுகுகிறார்கள். அப்பரீக்ஷையின் யோக்கியதையைப்பற்றி அநேகர் நன்கு அறிந்திப்பார்கள். ஆதலால் நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. அப்பரீக்ஷைக்கென்றே "புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டாற்போல்" பல்லாயிரம் பாடச்சுருக்க்ங்கள் புத்தக ருபமாக ஆண்டாண்டுதோறும் வெளிப்புறப்படுகின்றன. அவைகளே அப்பரீக்ஷைக்குப் போகும் மாணாக்கர்களுக்குத் தஞ்சம். அவைகளே அவர்களுக்கு உயிர். கற்பனாசிரியர் எத்தனை ஜாக்கிரதையாய் அவற்றை விலக்க முயற்சி செய்யட்டும். மாணாக்கர் அப்புத்தகங்களை நீக்கல் அரிதினும் அரிதாம். இவ்வழக்கத்தால் மாணாக்கர் சுயமாய்க்கஷ்டப்பட்டுழைக்கும் முறை முற்றிலும் ஒழிந்துபோகின்றது. அதனால் மாணாக்கர் மேல் வகுப்புக்களுக்கு வந்தவுடன் "பழைய சொக்கனே சொக்கன்" என்றவண்ணம் சுருக்கங்களையே விரும்புகின்றனர். மூன்றுவருஷப் பயிற்சியிருக்கிறதென்று 4-வது பாரத்தில் மாணாக்கர் கவலை கொள்வதில்லை. அநேகம் கலாசாலைகளில் அந்த வகுப்புக்குத்தக்க ஆசிரியனை நியமிப்பதில்லை. ஒருகால் நியமித்தாலும் ஸ்திரமாக நியமனம் செய்கிறதுமில்லை. அநேகமாய் அநுபவமில்லாதவர்களைத் தற்கால சாந்தியாய்ச் சொற்ப சம்பளத்தில் நியமனம் செய்துவிடுகின்றனர். அவர்களைப் பிள்ளைகள் எவ்வாறு மதிக்கவேண்டுமோ அவ்வாறு மதிப்பதுமில்லை. ஒருகால் மதிக்கத்தக்க ஆசிரியர்கள் ஏதோ மாணாக்கர் அதிர்ஷ்டவசத்தால் கிடைத்தால் அவர்களுக்கு ஏற்பட்ட குறைவான சம்பளத்தால் அவர்கள் நிலையாய் நிற்பதுமில்லை. தலைமை உபாத்தியாயர்கள் இவ்வகுப்புக்களை அடிக்கடி போய் மேற்பார்ப்பதுமில்லை. இவ்வகுப்புக்குக் கீழ்பாரங்களில் தமிழிலேயே விஷயங்கள் அநேகமாய்ச் சொல்லப்பட்டுவருவது வழக்கம். இவ்வகுப்புக்கு வந்தவுடனே போதனை அநேகமாய் ஆங்கிலத்தில்செய்யப்படுகின்றது. மாணாக்கர்களுக்கு ஒன்றும் புலப்படுகிறதில்லை. ஒரு பரீக்ஷைதேறிவிட்டோமென்ற அகம்பாவம் அச்சமயம் தான் மாணாக்கரைப்பற்றத் தொடங்குகிறது. அசிரத்தை,

அறியாமை, அகம்பாவம் முதலிய துர்க்குணங்களுக்கு வசப்பட்டு மாணாக்கர் கெட்டுப்போகின்றனர். ஆகையால் மூன்றுவது பாரத்திலுள்ள பரீக்ஷையை முற்றிலும் ஒழித்தலே மாணாக்கர்களுக்கு க்ஷேமத்தையுண்டுபண்ணும். கலாசாலை மாணாக்கர் சம்பந்தமாகமட்டும் அப்பரீக்ஷையை ஒழிக்கவேண்டுமென்பது நம்கருத்தேயொழிய அப்பரீக்ஷையையே தொலைத்துவிடவேண்டுமென்று நாம்கூறவரவில்லை. தற்காலம் இப்பரிக்ஷைக்குப் போகிறவர்கள் 14 பிராயத்துக்குட்பட்டவர்கள். இச்சிறுபிராயத்தில் அவர்கள் பரீக்ஷை பரீக்ஷையென்று அதே கவலையாய் மூளை சிதறிப்போகிறார்கள். ஆகையால் 18 பிராயத்துக்குமேற்பட்டவர்களே, இப்பரீக்ஷைக்குப் போகத்தக்கவர்கள் என்ற நிபந்தனை ஏற்படுத்தினால் எல்லோருக்கும் நன்மையுண்டாகும். 1-வதுபாரமுதற்கொண்டு மாணாக்கர்களைத் தொடர்ச்சியாய் ஐந்துவருஷகாலம் பயிற்றும்பக்ஷத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப்போக நல்ல ஞானமுண்டாகும். அப்பரீக்ஷையில் ஆயிரக்கணக்காய் பிள்ளைகள் தற்காலம் தவறுகிறதுபோல் தவறார்கள்.

[இன்னும் வரும்]

பத்திராதிபர்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நான்காம் வருஷோற்சவம்

இது நிகழும் மேமீ 24உ மாலை 4-மணிக்குச் சேதுபதி ஹைஸ்கூல் விக்டோரியாஹாலில் மிகச்சிறப்பாக நடந்தது. அச்சமயம் சென்னைத்தபாலிலாகாத்தலைவரான ஸ்ரீமாந், வி. கனகசபைப்பிள்ளையவர்கள் அக்கிராசனம் வகித்தனர். தஞ்சை, திரிசிரபுரம், தூற்றுக்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர், சென்னை முதலிய பலவிடங்களிலிருந்து இச்சங்கத்து வித்துவான்களில் முப்பது பேர்வரை விஜயம்செய்தார்கள். ஏனைக்கல்விமான்களுங் கனதனவான்களும் பல்லோர்கூடினர். சுருங்கச்சொல்லில் அக்கட்டிடமுழுதுந் தமிழபிமானிகளால் நிறைவுற்றிருந்தது

இங்ஙனங்கூடிய கற்றோர்சபையின் காக்ஷியைக் கண்டுகளிக்காதாருமுண்டோ! முதலிற் சபையோர் யாவருஞ் சிற்றுண்டிமுதலியவற்றால் உபசரிக்கப்பெற்றுத் தத்தம் ஆசனத்தமர்ந்தனர்.

சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந், பாண்டித்துரை சாமியவர்கள் சபையோர்க்கு வந்தனோபசாரமொழிகூறி ஸ்ரீமாந், வி. கனகசபைப்பிள்ளை யவர்கள் தமிழ்ப்பாஷாபிவிர்த்தி விஷயமாய்ச் செய்துவரும் அரிய பெரிய முயற்சிகளையும் அவர்களது பெருங்குணத்தையும் வியந்து சிறிதுநேரம்பேசினார்கள். பின்னர் இச்சபையின் அக்கிராசனாதிபதியாகிய பிள்ளையவர்கள் ஸ்ரீமாந், பாண்டித்துரை சாமியவர்கள் பெருந்தகைமையையும் அவர்கள் தமிழ்ச்சங்க விஷயமாய் மிக்கஊக்கத்தோடு முழைத்து வருதலையும்பற்றிச் சிறிது கூறினார்கள். அதன்பின் காரியதரிசி பிரும்மஸ்ரீ, டி. ஸி. ஸ்ரீனிவாச ஐயங்கார், பி. ஏ. பி. எல். அவர்களால் அறிக்கைப்பத்திரம் படிக்கப்பெற்றது. அதிலடங்கிய விஷயச்சுருக்கங்களாவன.

மாக்ஷிமைதங்கிய புதுக்கோட்டை மகாராஜா அவர்கள் சங்கத்தின் மூலநிதிக்கு ரூ 5000மும் மாதந்தோறும் ரூ 50ம் நன்கொடையாகக் கொடுத்துதவி, பாஷாபிமானத்தை விளக்கியதைக் கேட்க எவர்க்கும் பேரானந்தம் விளைந்தது. அவ்வுபகார நிதியைக்கொண்டு அம்மகாராஜா அவர்கள் பேரால் சங்கப்பரிசுகள் பலவுங் கொடுக்கப்பெற்றன.

இச்சங்கத்தின் வித்வான்களிதுவரை 86 பேர் ஆவர். பாரிசு நகரவாசியும் பெருந்தமிழபிமானியும் ஆகிய புரொபெஸர் ஜூலியன் வின்ஸசன் (Professor Julian Vinson) அவர்களும், மலாயா நாட்டுக் கோலாலம்பூரிலுள்ள காரை ஸ்ரீமத் சிவசிதம்பர ஐயரவர்களும் அந்நியநாடுகளிலிருந்து சங்கத்தினங்கத்தினராயிருந்து அபிமானித்துப் பெரிதும் உழைத்துவருதல் மிகவும் வியக்கற்பாலதாம்.

சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலையிலுள்ள மாணாக்கர் இருபதின்மர். இவர்கள் வழக்கம்போலவே உண்டியுடை முதலியன உதவப்

பெற்று நன்கு கற்றுவருகின்றனர். இவர்களிற் பலர் இனி நடத்தப்பெறும் பிரவேச பண்டித பரீக்ஷைக்கு வருவர்.

பாண்டியன் புத்தகசாலை.

இதிலுள்ள புத்தகங்களும் கையெழுத்துப் பிரதிகளும் தமிழ் அச்சுப் புத்தகங்கள் 1630. ஷை ஏட்டுப்பிரதிகள் 425. சம்ஸ்கிருத அச்சுப்பிரதிகள் 305. ஷை ஏட்டுப்பிரதிகள் 80. ஆங்கில அச்சுப் புத்தகங்கள் 1361. ஆ மொத்தம் 3801. இத்தொகை சென்ற வருஷத்தைப்பார்க்கிலும் இவ்வருஷத்து அதிகமாகியிருப்பதை யறிந்து மகிழ்கின்றோம். இப்புத்தகசாலையில் வந்து புத்தகங்கள் வாங்கிப் படித்தோர், எண்பதின்மரே. இது மிகவும் குறைந்த தொகையென்று விசனிக்கின்றோம். அடுத்த ஆண்டுக்குள் ஆயிரக்கணக்காக வரும்படி பாஷாபிமானிகளைப் பிரார்த்திக்கினறோம்.

செந்தமிழ்ப் பத்திரிகை.

இதுவரை இவ்வருஷத்தில் இதற்குச் சந்தாதார் தொகை 200. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்துவரும் வித்வான்களுக்குப் பக்கமொன்றுக்கு அணு எட்டு வீதம் கொடுத்துவருதலால் இது மென்மேலும் விர்த்தியடைய இடமுண்டு. இதில் பற்பல அரிய பெரிய விஷயங்கள் எழுதப்பெறுகின்றன,

பரீக்ஷைகள்.

இவ்வருஷம் நடந்த தனித் தமிழ்ப்பரீக்ஷைக்கு வந்தோரெண்மர். தேறினவர் நால்வர். பரிசு பெற்றோர் இருவர். ஆங்கிலகாலாசாலைப் பரீக்ஷைக்கு வந்தோர் தொகை 302. இவருள் யோக்கிதா பத்திரமட்டும் பெறுமாறு தேறினவர் எழுபத்தொன்பதின்மர். பரிசு பெற்றோர் ஐவர்.

நூற்பரிசோதனை.

வில்லிபுத்தூரார் பாரதம் ஆதிபருவம் சபாபருவமும், வைத்திய சாரசங்கிரகமும், பஞ்சலக்ஷணவினுவிடையும், பதிப்

பிக்கப்பெற்றன. அகநானூறும் பாரதத்தின் மற்றைப் பாகமும் அச்சிடப் பெறுகின்றன. இவை யெப்பொழுது வெளிவருமென்று தமிழ் வித்துவான்கள் ஆவலோடு மெதிர்பார்க்கின்றனர். யாழ்ப்பாணம் ஸ்ரீமாந் கு. கதிரைவேற்பிள்ளையவர்கள் பன்னெடுங்காலம் அரிதின் முயன்று எழுதிவந்த தமிழ் விரிவகாரதியை அவர்புதல்வராகியகொழும்பு அட்வொகேட் ஸ்ரீமாந் கே. பாலசிங்கம் அவர்கள் நம் சங்கத்திற்குக் கொடுத்தமை எவர்க்கும் மகிழ்ச்சி விளைக்கத்தக்கது. சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் ஏ. சிங்காரவேலு முதலியாரவர்கள் நுணுகி ஆராய்ந்தெழுதிய அபிதானவிளக்கமென்ற அரிய நூலையும் நம் சங்கம்பெற்றதாகும். இவ்வுபகாரிகள் இருவருக்கும், இவர்களைவேண்டி இந்நூல்களை நம் சங்கத்திற்கீட்டிய ஸ்ரீமாந் பாண்டித்துரைசாமி அவர்கட்கும் தமிழ்மக்களனைவரும் நன்றி செலுத்தற்பாலார்.

வரவு செலவு

இவ்வருஷ வரவு	...17,683—8—9
செலவு	...17,534–12—9
பாக்கி யிருப்பு	... 148–12—0
இன்னும் சங்கத்திற்கு வரவேண்டிய தொகை	... 9,014—0—0
சங்கமிறுக்கவேண்டிய கடன் ...	... 3,550—0—0
தற்காலம் சங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிற சொத்து	...25,171–13—5
இவ்வருஷம் சங்கத்திற்கு நன்கொடையாக வந்த தொகை ...	... 7,181–12—9

இவை முதலாக அறிக்கைப்பத்திரத்தைப் படிக்கக்கேட்டு சபையார் யாவரும் மகிழ்ந்தனர்.

பின்னர் சபையோரிற்சிலர் தங்கள் நல்லபிப்பிராயங்களைக் கூறினர். சபாநாயகராகிய பிள்ளையவர்கள் தமிழின் சிறப்பைப்பற்றியும் சங்கத்தினக்கிராசனாதிபதியாகித் தமிழ் அபிவிர்த்தி

விஷயத்தில் தம்முடல் பொருளாவியைத்தத்தஞ்செய்யச் சித்தமாயிருக்கிற ஸ்ரீமாந் பாண்டித்துரை சாமியவர்களின் நன் முயற்சியைப்பற்றியும் வியந்துபேசினர்.

அநந்தரம் யாவர்க்கும் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றன.

பின்னர் போனகிராப் என்னுங் கீதத்தைக் கேட்டும் மாஜிக் லாண்டேர்ண் என்னும் விநோதக் காக்ஷியைக்கண்டும் பெருமகிழ்வுற்றுச் சபை கலைந்தது.

இத்தகைத்தாய தமிழ்ச்சங்கமும் அக்கிராசனாதிபதியவர்களும் அங்கத்தினரும் அபிமானிகளும் மேன்மேலுந் தழைத்தோங்கத் திருவாலவாயுடையான் றிருவருளைச் சிந்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

இந்தியாவும் தொழிற்பாடசாலைகளும்.

[முன் தொடர்ச்சி]

மூலநிதி சிறிதும் இல்லாத எளியபாடசாலைகளின் செலவையும், சிறுவர்கள் செய்யும் சாமான்களை விற்பதால் செய்துகொள்ளலாம். இந்தியாவில் பித்தளைத்தகடுவேலைகளும், சிற்றுளியைக்கொண்டு செய்யும் நுட்பமான கல்வேலையும் அநேகமாய்ச் சிறுவர்களைக்கொண்டே செய்யப்பட்டு வருகின்றன. ஆகையால் நீங்களும் உங்கள் பாடசாலைகளில் அம்மாதிரி வேலைகளை நடத்தி அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு அப்பள்ளிக்கூடங்களின் செலவுகளை நடத்த ஏற்பாடு செய்யவேண்டியது. அவ்வாறு சிறுவர் வேலைத்திறமையுடனும் கைச்சாதுரியத்துடனும் செய்யும்வேலைகளை இங்கிலாந்துமுதலிய நாகரீகதேசங்களுக்கு அனுப்பும்பக்ஷத்தில் சிறுவர்கை வேலைப்பாடு என்று மிகவும் மதித்துச் சிறப்பித்து விலைக்கு வாங்குவார்கள். இனி நான் உங்கள் விஷயமாய்த் தெரிவிக்கிறது யாதெனில் என்னுடைய மானியூல் ஆவ் டிஸைன் (Manual of Design) என்ற சிற்ப படப்புத்தக

த்தை அறப்படித்து அதிலிருந்து சங்கதிகளைக்கிரகித்து அவற்றைச் சிறுவருக்குப்போதித்து அவர்களை எழுதப்பழக்கவேண்டும். அதன் பலனை நடவடிக்கையில் அறியவேண்டுமே ஒழிய இக்கடிதத்தில் விவரித்து எழுதினதினால் தெரியமாட்டாது. பின் இரண்டு மூன்று சிறுவர்களைப்பொறுக்கி யெடுத்து அவர்களைச்சுலபமான சித்திரங்களிற்பழக்கி அவைகளிலே அவர்கள் தங்கள் புத்தியை உபயோகித்து அதிகப்பயிற்சிசெய்து திறமையடையும்வண்ணம் செய்தல்வேண்டும். அச்சமயம் அவர்கள் இதரதேச சம்பந்தமான சித்திரங்களைத் தங்கள் வேலையில் கலக்காவண்ணம் செய்தல் வேண்டும். இதுவே நீங்கள் முக்கியமாய் அறியவேண்டிய விஷயம். இதுநிற்க.

தொழிற் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு தக்க கனதனவான்களைக் கொண்டு வேண்டியபொருளைச்சேகரஞ்செய்ய ஏற்பாடுசெய்து இம்மாதிரியான பாடசாலையை ஒவ்வொரு கிராமத்திலும் தொடங்கல்வேண்டும். அப்பாடசாலைகளில் ஏற்படும்படியான வேலைகள் அவ்வவ்வூர் உபயோகத்துக்குத் தக்கவண்ண மிருப்பதுடன் அவைகள் அக்கிராமங்களிலேயே விலையாகும்படியாகவு மிருத்தல் வேண்டும். இவ்விதமான ஏற்பாடுகளைத் தக்கவண்ணம் ஆங்கில அதிகாரிகளுக்குத் தெரிவித்து இவற்றால் ஏழைகள் அடையும் பயனை விளக்கிக் காட்டி இவ்வபிவிருத்தி விஷயத்தில் அவ்வதிகாரிகளின் உதவியையும் கோரவேண்டும்.

[இன்னும் வரும்]

K. V. Venkatarama Aiyar,
Artist & Painter,
College of Engineering,
Work shop Silepur.

மனிதனது எழுகூறு.

[முன் தொடர்ச்சி]

உலகில் உயிருடன் வாழும் மனிதர்கள் பரமியக்கொலுக்கள் கூடும் இடங்களுக்குச் செல்லாமலே இந்தக் காமப்பிரேதங்களின் ஸ்பரிசம் பெற்று அதனால் விளையுங் கெடுதிகளை யடையலாம் என்பதையும் நாம் கவனத்தில் வைக்கவேண்டும். முந்தியே சொல்லியபடி இக்காமப் பிரேதங்கள் மனிதனுடைய மிருகபாகத்தை முக்கியமாய்ப் போஷித்துத் திருப்தி செய்வதற்கேற்பட்ட இடங்களுக்கு வலிந்திழுக்கப்பட்டு அவ்விடங்களில் எப்பொழுதும் காத்திருக்கும். மதுபான சாலைகள், மாம்ஸம் விற்கும் கடைகள், சூதாடும் வீடுகள், காம போகக்கிரகங்கள் முதலிய இவ்விடங்கள் எல்லாம் கொடிய சண்டாள காந்தி நிறைந்திருக்கும். இவ்விடங்கள் எல்லாம் கொடுங் கசுமாலமான காந்திப் பிரவாகங்களின் சுழல்களே. இவ்விடங்கள் காமப்பிரேதங்களை காந்தம் இரும்பை வலிப்பது போல் வலித்திழுக்கின்றன. பிரபஞ்ச மயக்கங்களும் காமாதி கோரங்களும் சிற்றின்பக்களிப்புக்களுமான அபாயச் சுழல்களிடத்து இக்காமப் பிரேதங்கள் போயடைகின்றன. தங்களுடைய சுபாவ ஓட்டங்களுக்கு மிகவும் ஒத்திருக்கும் இவ்விடங்களின் காந்திப் பிரவாகங்களினால் உயிர்ப்பிக்கப்படுவதினால் இக்காமதேகங்கள் தங்களுக்குச் சுயமாயுள்ள சுறு சுறுப்பையும் பலத்தையும் பார்க்கிலும் அதிக சுறுசுறுப்பும் பலமும் பெறுகின்றன. காமாதி விகாரங்கள் ஆசாபாசங்கள் என்னும் இவைகளின் ஆவிகளினால் சூலடைந்து இருப்பதாலும் ஆனால் இந்த ஆசாபாசங்களை ஸ்தூலமாய் அனுபவித்துத் திருப்தியடைய ஸ்தூல தேகமில்லா திருப்பதினாலும் இக்காம தேகங்களாகிய பிரேதங்களின் காந்திப் பிரவாகங்கள் உயிருடன் உலகில் வசிக்கும் மனிதர்களில் ஓடிக்கொண்டிருக்கும் அதேமாதிரியான காந்திப்பிரவாகங்களுடன் கலந்து அவைகளைப் பலப்படுத்தி விடுகின்றன. ஆகையால் உயிருடன் வாழும் மனிதர்களின் மிருக சுபாவங்கள் தங்கள் சுய பலத்தைப் பார்க்கிலும் அதிக பலம் பெற்று விடுகின்றன. ஆதலால் காமலோகத்திலுள்ள காம தேகங்கள் என்னும் பிரேதங்களின் சக்திகள் உயிருடன் வசித்துக்கொண்டிருக்கும் மனிதர்களின் மிருக சுபாவங்களின்மேல் தாக்கி இணக்கித் தொழில் செய்யும்பொழுது அம்மிருக சுபாவங்களை அந்தக்கரணத்தின் இச்சா சக்தியாகிய உள்ளத்தினால் அடக்கியாள்வது கடினமாகின்றது. காமலோகம் என்றால் காமத்திற்கிடம் என்று பொருள். இக்காமப்பிரேதங்கள் தங்கும் இடமாகிய புவர்லோகத்தின் தலத்தைக் குறிக்கிறதற்குக் காமலோகம் என்னும் பதம் உபயோகிக்கப்படுகின்றது.

உயிர்ச்சக்திகுறைந்திருக்கும் ஸ்தூலதேகமாகிய நிலத்தில் விழுந்து வேரூன்றி வளரக்கூடிய வியாதியின் கருக்கள் தொற்றுநோயாளி வீட்டினிடமிருந்து எப்படிவெளியே பரந்து வருகின்றனவோ அதுபோல் இக்காமலோகத்தினின்றும் கொடியவிஷ சுபாவமுள்ள காந்திப்பிரவாகங்கள் கதிர்விட்டுப்புறப்பட்டு வருகின்றன. நமது சுபாவங்களை காமத்திற்கு இடங்கொடாமல் திருத்திக்கொண்டேயிருந்தால் இக்கொடிய விஷப்பிரவாகங்கள் நம்மையடையமாட்டா. அப்படியின்றி காமாதிகளுக்கு இடம் கொடுத்து நமதுதேகத்தின் காந்திஓட்டங்கள் காமலோகத்தினின்றும் புறப்பட்டுவீசிவரும் காந்திஓட்டங்களுக்கு ஒத்திருக்கும்படி செய்துகொண்டால் காமலோக விஷப்பிரவாகங்கள் நம்மைத்தாக்கி நம்முடன்கலந்து நமது மிருகசுபாவங்களைப் பலப்படுத்தி நம்மை மிருகங்களாக்கிவிடும். ஆகையால் அந்தக்கரணத்தைச் சுத்தமாகவும் உள்ளத்தைத் திடமாகவும் வைத்துக்கொண்டிருப்போமாகில் ஸ்தூல உலகத்தில் வசித்துக்கொண்டு சாதாரணமாய் ஸ்தூலப்பிரபஞ்சத்திலேயே பிரக்ஞையுள்ள நாம் காமலோகத்தினின்றும் வந்துகொண்டிருக்கும் கேடுவிளைக்கும்படியான காந்திப்பிரவாகங்களின் செயல்களினின்றும் தப்பிக்கொள்ளலாம். நமது தேகங்களைச்சவுக்கியமாயிருக்கும்படி பாதுகாத்துவருவதினால் வியாதிவராமல் தடுத்து நாம் நம்மைக்காத்துக்கொள்ளுகிறோம். நமதுகண்களுக்குப் புலப்படாமல் ஆகாயத்தில் உலாவும் வியாதிக்கருக்களை நம்மிடம் வராமலும் நமது தேகங்களுக்குள் புகாமலும் தடுத்து நம்மைக்காத்துக்கொள்ள முடியாது. ஆனாலும் இக்கருக்கள் தங்கிஓங்கிவளர்ந்து விருத்தியாவதற்குத்தகுதியான நிலமாய் நம்தேகங்கள் ஆகாமலிருக்கும்படி தடுக்கக்கூடும். தொற்றுவியாதியிருக்கும் இடத்திற்கு நாம் வலியவேண்டுமென்றே சென்று அதற்கெதிரே நிற்கவேண்டிய அவசியமுமில்லை. அதுபோலவே காமலோகத்திலிருந்து வந்துபரவும் கொடியகருக்கள் விஷயமாயும் நாம் நடந்துகொள்ளக்கூடும். இக்காமலோக கொடியவிஷக்கருக்கள் வந்து பதிந்து முளைத்துவளர்ந்து விருத்தியாகக்கூடிய காமமனசுஎன்னும் நிலம் நம்மிடத்தில் உண்டாகாமல் நாம் தடுத்துக்கொள்ளக்கூடும். நாம் கெட்ட இடங்களுக்குப்போகவேண்டியது மில்லை. காமலோகக்கருக்களை ஆகருஷிக்கத்தகுந்தகுணங்களுக்கும் சாமியாடுதல் பேயாடுதல் முதலியவைபோன்ற ஒருவனை உபகரணியாக்கும் போக்குகளுக்கும் நாம் மனதார இடங்கொடுக்கவேண்டியதுமில்லை. விழிப்புள்ள திடஉள்ளமும் பரிசுத்தமான மனசுந்தான் நமக்குச்சிறந்தகாவல்.

இனிக் காமமனசுக்கு வரக்கூடிய மூன்றாவது கதியைச் சற்று நோக்குவாம்.

அது சுத்தமனசுடன் ஐக்கியமாதற்குப் பதிலாகத் தனது மூலத்தி லின்றும் அறுந்து பிரிந்துபோய்க் காமத்துடன் ஐக்கியமாய்விடலாம்.

இந்தச் சம்பவம் பாக்கியவசமாய் வெகு அபூர்வமாய் வரும். கீழ் மனசு சுத்தமனசுடன் பூரணமாய் ஐக்கியமாவது எவ்வளவு அபூர்வமோ அவ்வளவு அபூர்வம். ஆனபோதிலும் இவ்வித சம்பவம் உண்டாதல் சாத் தியமானபடியால் அதையும் விவரித்துச்சொல்லல் அவசியமே.

மனிதனுக்குள் காமசுபாவத்திற்கும் மனசுக்கும் உண்டாகும்போராட் டத்தில் வெற்றியெல்லாம் காமத்தினிடமாகவே பூரணமாயிருக்கும்படி அவ் வளவு பலமாய் காமத்தினால் மனிதன் அடக்கி ஆளப்படலாம். கீழ்மனசு காமாதிகளுடன் இடைவிடாமல் சம்பந்தப்பட்டு உராய்தலினாலும் அவைக ளால் இறுக்கப்படுவதினாலும் அக்கீழ்மனசின் சத்து நாளுக்குநாள் மெலி ந்து தேய்ந்துகொண்டுவரும்படி அவ்வளவு மிகுதியாய்க் கீழ்மனசு காமத்து க்கு அடிமைப்பட்டுக் கடைசியாக அது ஆசைதூண்டினபடியெல்லாம் இணங்கி அது இழுத்துச்சென்றபடியெல்லாம் தொடர்ந்தேறிச்சென்று அதனால் தப்பாது வரக்கூடிய பலனை யடைகின்றது. அதாவது மேல்மன சைக் கீழ்மனசுடன் இணைக்கும் நுண்ணிய தளையானது—அதாவது நாதன் அல்லது தலைவனுடன் கீழ்மனசைப் பிணைக்கும் அந்த நுண்மையான வெ ள்ளிகம்பி அல்லது இழையானது—இரண்டாய்த்தெறித்துப்போகின்றது. அப்பொழுது உலகத்தில் உயிருடனிருக்கும்பொழுதே கீழ்ச்சதுஷ்கமானது அது பிணையப்பட்டிருந்தஉயர்தர திரயத்தினின்றும் பறிபட்டுப்போகின்றது. அதாவது உயர்தரசுபாவமானது கீழ்தர சுபாவத்தினின்றும் முழுவதும் சிதைந்து பிரிந்துவிடுகின்றது. மனிதன் இரண்டாய்க் கிழிபட்டுப்போகி றான்; அவனிடத்துள்ள மிருகமானது அதை யடக்கியாளக்கூடிய அறிவி னின்றும் முறிந்து பிரிந்து வாழ்வென்னும் வனத்தில் செல்லும்பொழுது வழிகாட்டியாயிருக்கவேண்டிய அறிவுப் பிரபையின் சாயைகளைத் தன்னு டன் கொண்டு * கலினமற்ற புரவியைப்போலும் தனிக்கொண்டிக் காளை யைப்போலும் பிடிப்பற்றுப் புறப்பட்டுச் செல்லுகின்றது. மனிதனுடைய உயர்தரமனோவறிவின் காந்தியைத்துண்டுதுண்டாய் இங்குமங்குமாகத் தன் னிடத்தில் பெற்றிருப்பதினாலேயே இந்தமானுஷீய மிருகம் உலகிலுள்ள பகு த்தறிவற்ற மிருகங்களைக்காட்டிலும் அதிகஅபாயமானமிருகமாம். ரூபத்தில் மனிதனும் சுபாவத்தில் மிருகமும் அதாவது தோற்றன்மாத்திரையில் மனி தனும் ஆனால் மனிதனுக்குள்ள அன்பு, கருணை, இரக்கம், யதார்த்தம், நடு நிலை, நீதம், ஏதும் இன்றியுமிருக்கப்பட்ட இப்படிப்பட்ட பிராணியை மனித

* கடிவாளம்நீங்கிய குதிரை.

சஞ்சாரங்களுக்குள் இங்கும் அங்கும் நாம் சந்திக்கலாம். இது உயிருள்ளபொழுதே ஊழ்த்து நாறிப்போயினதாம். மனிதன் இப்படியும் ஆய்விட்டானேயென்று திருப்புவதற்கு முடியாததினால் பிரயோசனமற்ற பரிதாபமாயினும் மீண்டு ஆழ்ந்த பரிதாபத்துடன் கண்டு திகைத்து நடுங்கக்கூடிய பிராணியாம். மரணத்திற்கப்பால் இம்மானுஷிய மிருகத்தின் கதியென்ன?

தனக்கு *நித்தியத்துவத்தை வேறு யாதுங் கொடுக்காததுபோல் கொடுக்கக்கூடிய உயர்தர தத்துவங்களாகிய ஆத்துமா புத்தி மனசு என்னும் கூறுகளினின்றும் இவ்விதமாக முறிந்து பிரிந்து போய்விட்ட இந்த மானுஷிய மிருகத்தின் கதி எருங் கடைசியில் அழிந்து போவதேயாம். ஆனாலும் அதற்கு உறுதியாய் நிற்குங் காலமும் உண்டு.

இப்படிப்பட்டவனுடைய காமதேகமானது அதிக திகில் உண்டு பண்ணத்தக்க சத்துவமுள்ளது. சில அபூர்வமான சமயங்களில் இக்காம தேகம் மனிதர்களுக்குள் வந்து புனர் ஜன்மம் எடுக்கும்படியான ஒரு புதுமையான ஒப்பற்ற சிறப்புப் பொருந்தியிருக்கின்றது. இது நசிக்கப்போகும் வெறும் பிரேதமன்று; இது தனக்குள் மனக்கூறில் அதிக பாகத்தைச் சிக்க வைத்துக்கொண்டிருப்பதால் பிரேதத்தைப்போல் சுபாவத்தில் நசித்துப் போவதற்கு இடந்தருவதில்லை. இது ஜீவிப்பதற்கு வேறொரு ஆதரவுமின்றித் தனியாய் ஒரு சீவியாயிருக்கப் போதுமான சுவதந்திர முள்ளது; ஜோதி வீசுவதற்குப் பதிலாக இருளாயிருப்பது; அறிவுச் சுடரானது சுத்தமாய்ப் பிரகாசமாயிருப்பதற்குத் பதிலாக மங்கி மலினமாய்விட்டது. ஆயினும் அது மறுபடியும் மாமிசப்போர்வையாகிய தேகத்தை யெடுத்து மனிதர்களுடன் தானும் ஒரு மனிதனாக வந்து வசிக்கப்போதுமான மனோ சைதன்னியத்தை இம்மனோ சைதன்னியம் பிரகாசம் நீங்கி மலினமானதாயினும் தனக்குள் சிக்க வைத்துக் கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட மனிதன் —— உள்ளே வெறும் மிருகமும் வெளியே வெறும் மனிதக்கூடுமான இதற்கு மனிதன் என்னும் நாமம் உண்மையில் தருமாயின் —— இந்த மானுஷ்ய தேகம் போர்த்திருக்கும் மிருகம், இந்த மானுஷீய மிருகம் நன்மை யென்பதே கனவிலும் தெரியாததாய் எவர்க்குந் தீமை செய்வதே தொழிலாய் உலகத்தில் சாதாரணமாய் மனித சுபாவம் பொருந்தியிருக்கும் சகல மனிதர்களுடைய சுபாவ சத்துருவாய் பூலோக வாழ்வை கழிக்கின்றான். மிருகங்களுக்குள்ள இயற்கை யறிவைத் தவிர வேறு அறிவில்லாததாய், கேவலம் காமக்குரோதாதிகளின் தோற்றன் மாத்திரையினாலே இயக்கப்படுவதாயும், காமாதிகள் மனதைத் தாக்கியதினா லுண்டாகும் மனவெழுச்சியென்பதே யெப்போது மறியாததாயும், அதி சூக்ஷ்மமான யுக்தியும் உபாயமும்

* நித்தியத்துவம்—அழிவின்மை, என்றும் இருக்குந்தன்மை.

இயற்கையாய்ப்பொருந்தியுள்ள மிருகங்களும் நகரக்கூடாதபடியான கட்டம் பொருந்தியும், கேவலம் கபடமின்றி இயற்கைச் சுபாவமாயுள்ள பிராண விசையினால் தற்காப்பு நிமித்தம் இயங்கித் தற்செயலாய்த் தீமை செய்து விடும் மிருகங்களைப்போலல்லாமல் அபாயத்தையும் தீங்கையும் யோசித்து வேண்டுமென்றே உண்டுபண்ணி அதிற் சந்தோஷமடையும்படியான கொடிய விஷமத்தோடுங் கூடியிருக்கும் இந்தப்புனர் ஜன்மம் எடுத்த மானுஷ்ய மிருகமாகிய ஜீவியானது தீமையும் கீழ்மையும் இழிவும் எல்லாம் சேர்ந்து திரண்டு உருவெடுத்தாலெப்படியிருக்குமோ அவ்வுருவத்தை எட்டிப் பார்க்கும். கண்டவர்களும் கேட்டவர்களும் "இதுவும் ஒருமானிடஜென்மமா" வென்று அதிசயித்துத்திகைத்துப் பெருமூச்சுவிட்டுச்சொல்லும்படியாய் மனிதர்களுக்குள் ஒவ்வோர்காலங்களில் சிலபிராணிகள் தோன்றி மனிதன் என்னும் பேருக்கேபழுது உண்டுபண்ணும்படியானவர்கள் இப்படிப்பட்ட மானுஷ்யமிருகங்களேயாம். ஒவ்வொருதொடர்ந்தபின் பிறவியிலும் மேலும் மேலும் ஈனதசையில் தாழ்ந்து பிறந்து அதினால் இத்தீமையின் ஊக்கம் படிப்படியாய்த்தேய்ந்து குறைந்துவந்தகடைசியாக இந்தமானிஷ்யமிருகம் சைதன்னிய மூலத்தினின்றும் துண்டாய்ப்பிரிந்து நசித்துப் போகின்றது. கடைசியாய் அதன் அம்சங்களெல்லாம் வேறுவேறாய்ப்பிரிந்து பின்னால்வேறு ஜீவரூபங்களாவதற்கு உபயோகமாகின்றது. ஆனால் அதுதனியாய் ஒரு ஜீவனாய்அல்லது ஆன்மாவாய் இருக்கும்படியானநிலைபோய்விட்டது. சைதன்னியநூலினின்றும் ஒடிந்து விழுந்து போனமணியைப்போலும் இந்தஜீவி. இது பிறவியின்பயனை முற்றிலும் இழந்துவிட்டது. இக்கதிமிகவும் பயங்கரமானது.

[இன்னும் வரும்.]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஹெலேநாம்பாள்.

[முன் தொடர்ச்சி]

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித்தமராக்கொளல்."

நமது தேசத்துக்கு வந்த சில தினங்கட்கப்பால் ஹெலேநாம்பாளும் கர்னல் ஆல்காட்டும் உலகிலுள்ள எல்லா க்ஷேத்திரங்களுக்

கும் மேலான க்ஷேத்திரமாகிய புனிதமுள்ள காசிக்குச் சென்றார்கள். அவ்விடத்திலுள்ள சம்ஸ்கிருத பண்டிதர்களெல்லாம் இவர்களை மிகவும் மரியாதையுடன் ஏற்று கர்னல் ஆல்காட்டின் பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்தித்து நமது மதத்தின் பெருமையை யெடுத்து விவரிப்பதற்கு இக்காலத்தில் இவர்களாயினும் தோன்றினார்களே யென்று இவர்களை யன்புடன் போற்றினார்கள். காசியில் ஒரு சம்ஸ்கிருத கல்லூரியுண்டு. இக்கல்லூரியின் தலைவர் (Principal) வித்துவான் ஜி திபாட் (Professor G. Thibaut, PH. D.,) என்பவர். இவர் ஜெர்மனிதேசத்தவர். டாக்டர்பட்டம் பெற்றவர். சம்ஸ்கிருதபாஷையில ஆழ்ந்தகருத்துடையவர். இவர் பிரபல வித்துவான் மாக்ஸ் மல்லர் என்பவரின் சீடர். இவர் இவர்களுடன் சிநேகித்தார்.

ஒருநாள் சாயங்காலம் டாக்டர் திபாட் பிரமாத தாசமித்திரர், தயாநந்த சரஸ்வதி சுவாமி, ராமராவ், தாமோதரர், கார்டன் அம்மை (Mrs. Gordon,) கர்னல் ஆல்காட், கல்லூரியின் சம்ஸ்கிருத பண்டிதர்கள், வேறுசிலர் ஹேலேநாம்பாள் எல்லோருங்கூடி மதவிஷயமாயும் சாஸ்திரவிஷயமாயும் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தயாநந்த சரஸ்வதிசுவாமி வேதங்களில் விக்கிரக ஆராதனைக்கு ஆதாரமில்லையென்றும் ஆகையால் விக்கிரக ஆராதனை செய்யக்கூடாதென்றும் சொல்லினர். பிரமாத தாசமித்திரரும் கல்லூரியின் சம்ஸ்கிருத பண்டிதர்களும் விக்கிரக ஆராதனை அவசியம் என்று வாதித்தார்கள். வெகுநேரம் இப்படி சென்ற பிறகு சில பண்டிதர்கள் உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். மற்றவர்களிருந்து சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களில் யோகபாதத்தைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். சம்பாஷணையின் மத்தியில் டாக்டர் திபாட் என்பவர் ஹேலேநாம்பாளை நோக்கி அம்மணி, முற்காலங்களில் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் சித்திகள் கைவந்த யோகியர்கள் சந்தேகமின்றியிருந்தார்கள் என்றும், அவர்கள் வெகுவிநோதமான காரியங்கள் செய்யக்கூடு மென்றும் உதாரணமாக இதைப்போன்ற அறையில் ரோஜாப்புஷ்பமாரி

விரும்படி செய்வார்கள் என்றும் ஆனால் இக்காலத்தில் அப்படிச் செய்யக் கூடியவர்கள் கிடையாதென்றும் இப்பண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.'' என்றனர். இப்படி அவர் கூறினதும் ஹேலேநாம்பாள் தனது குரிச்சியில் விரைப்பாய் நிமிர்ந்து அவரை ஏளனமாய்ப் பார்த்து "ஓகோ, அவர்கள் அப்படியா சொல்லுகின்றார்கள்? இக்காலத்தில் ஒருவராலும் அது முடியாதென்கிறார்களா? நல்லது இருக்கட்டும். நான் அவர்களுக்குக் காண்பிக்கின்றேன். இக்காலத்து இந்தியர்கள் தங்கள் மேனாட்டு எஜமானர்களைத் தங்கள் சாண்வயிற்றின் பொருட்டு இச்சகமாய் எப்பொழுதும் முகஸ்துதி செய்துகொண்டிருப்பதிலும், தங்களுடைய அதர்மச் செய்கைகளில் நேசம் வைத்திருப்பதிலும் குறைந்தும் அனேகவிதங்களில் தங்கள் முன்னோர்களைப்போலிருக்க அதிகமாய் முயன்றுமிருப்பார்களேயாகில், அவர்கள் தங்களைப்பற்றி இவ்வித இழிவான அறிக்கை செய்துகொள்ளவுமாட்டார்கள். மேனாட்டுக் கிழவியாகிய என்னை தங்கள் சாஸ்திரத்தின் உண்மையை ருசுப்படுத்தும்படியாகவும் வைத்துக்கொள்ளார்கள்.'' என்று ச...வாயில் என்னத்தையோ முணுமுணுவென்று சொல்லிக்கொண்டு தனது வலது கரத்தை அதிகாரதோரணையுடன் ஆகாயத்தில் வீசினாள். உடனே ஆகாயத்தினின்றும் அங்கிருந்தவர்கள் தலைகளின்மேல் ரோஜாப்புஷ்பங்கள் விழுந்தன. அவர்கள் ஆச்சரியப்பட்டுச் சற்று சும்மாவிருந்து அப்பால் கீழே சிதறிக் கிடந்த ரோஜாப் புஷ்பங்களை உனக்கெனக்கென்று ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் டாக்டர் திபாட் மாத்திரம் ஸ்தம்பத்தைப்போல் சற்றும் அசையாமல் மனத்தில் இவ்விநோதக்காக்ஷியைப்பற்றிப் பலவிதமாய்ச் சிந்தித்துக்கொண்டிருப்பவரைப்போல் காணப்பட்டார். அப்பால் முன் நடந்துகொண்டிருந்த யோகசாஸ்திரத்தைப்பற்றிய சம்பாஷணை இன்னும் அதிக உல்லாசத்துடன் நடந்துகொண்டிருந்தது. அப்பால் சாங்கியத்தைப் பற்றித் தர்க்கம் நடந்தது. டாக்டர் திபாட் இவ்விஷயத்தைப் பற்றி வெகு ஆராய்ச்சியான கேள்விகள் கேட்டார். இவைகளுக்கெல்லாம் திருப்திகரமான

விடை ஹெலெனாம்பாள் அளித்து அவருக்கிருந்த சந்தேகங்களை யெல்லாம நிவர்த்தித்தாள். அப்பொழுது அவர் தன்னுடைய ஆசிரியராகிய மாக்ஸ் மல்லராவது சம்ஸ்கிருத பாஷையைக் கற்றுணர்ந்த வேறு எந்த மேனாட்டுக் கலைஞராவது சாங்கியத்தின் உண்மையான பொருளை இந்தப்பெண்மணி தன் மனத்துக்குத் தெளிவாய் விளக்கிக்காட்டியதுபோல் காட்டினதேயில்லை யென்று கூறி அவருக்கு அனேக வந்தனம் அளித்தனர். அப்பால் சம்பாஷணைகள் முடிந்து எல்லோரும் பிரிந்துபோகும் சமயத்தில் இவர் "அவளைப்பார்த்துத் தான் எதிர்பாராது ஆலயத்தினின்றும் விழுந்த ரோஜாப்புஷ்பங்களில் ஒன்றாவது தனக்குக்கிடையாதபடி மற்றவர்களெல்லாம் எடுத்துககொண்டபடியால் தனக்கு ஒருபுஷ்பம் அவ்விரவின் வினோதச்செய்தியின் ஞாபகச்சின்னமாகக் கிடைக்கக் கூடுமாவென்றனர். இப்படி அவர்கேட்டபோது தன்மனசில் ரகசியமாக முதற்புஷ்பமாரி ஜாலம் அல்லது செப்படி வித்தையாயிருப்பின் திடீரென மறுபடியும் கேட்டால் அவள் இரண்டாவது தரம் செய்யத்தயாராயிருக்கமாட்டாள் என்று எண்ணினர் போலும். அவர் அப்படிக்கேட்டநிமிஷமே அதற்கென்னதடை உனக்கெத்தனை வேண்டுமோ அத்தனை கிடைக்கும்" என்று சொல்லிக்கொண்டே முன்போல கையை வீசினாள் பலபலவென்று புஷ்பமாரி பெய்தது. இப் புஷ்பங்களில் ஒன்று அவர் தலை உச்சியில் பொட்டெடன அடித்துக் குதித்து அவர் மடியில் போய் உட்காாந்தது. அவர் திடுக்கிட்டு இருதரம் கண்களை மூடிமூடித் திறந்து ஒரு புஷ்பத்தைக் கையிலெடுத்துக்கொண்டு தன் தலையில் அடித்த விசையைக் கருதும்பொழுது புஷ்பங்கள் ஆகாயத்தில் வெகு தூரத்திலிருந்து வந்தவைகள் தான் என்று சொல்லினர். கடைசியாக அவர் விடை பெற்றுக்கொண்டு போகும்பொழுது கர்னல் ஆல்காட் அவருடன் எழுந்து வழியனுப்பச் சென்றனர். தாமோதரர் ஒரு லாந்தர் எடுத்துக்கொண்டுவந்தார். ஹெலெனாம்பாளுங் கூடவே வாசல்வரை வந்து டாக்டர் திபாட் கர்னல் ஆல்காட்டேன் கை குலுக்கி விட்டுத் திரும்பும் பொழுது ஹெலெனாம்பாள் தாமோதரர்

கையில் பிடித்துக்கொண்டிருக்கும் லாந்தரை வாங்கி இடக்கைச் சுட்டுவிரலில் தாங்கிக்கொண்டு உள் எரியும் சுடருக்கு நேராகத் தன் வலக்கைச் சுட்டுவிரலைச் சுட்டிக்காட்டிக்கொண்டு அதிகாரத்துடன் 'மேலேறு' என்றனள். சுடர் மேலே ஏறி ஏறி நீண்டு லாந்தரின் முகட்டைத் தொடும் வரை வந்தது. 'இறங்கு' என்றனள். சுடர் கீழே இறங்கி இறங்கி வந்து திரியின் நுனியில் வந்து அவிந்து போகும் சமயத்தில் கடைசியாக நீல நிறமாய்ச் சிறுக எரிவதுபோல் எரிந்தது. அப்பால் "மேலேறு, ஏறு, நான் கட்டளையிடுகிறேன்" என்றனள். அவளுக்குக் கீழ்ப்படிந்து அந்தச்சுடர் முன்போலவே லாந்தரின் முகட்டை எட்டும் வரைமேலேறிற்று. "இறங்கு" என்று ஆஞ்ஞாபித்தாள். முன்போல இறங்கிற்று. அப்பால் தாமோதரர் கையில் லாந்தரைத் திருப்பிக் கொடுத்துவிட்டு டாக்டர் திபாட்டுக்குத் தலையசைத்து விடை கொடுத்துத் திரும்பி வீட்டுக்குள் வந்து விட்டனள். சிலகாலத்துக்கப்புறம், இவள் கர்னல் ஆல்காட்டுடன் ஸிம்லா (Simla) வுக்குப் போயினள். பையோனீர் (Pioneer) பத்திராதிபராகிய ஸின்னேட்டும் அவர் மனைவியும் வெயில் காலத்திற்கு அவ்விடம் போனவர்கள் ஹெலேநாம்பாளையும் கர்னல் ஆல்காட்டையும் அவ்விடம் வரும்படி அழைப்புக் கடிதம் எழுதினார்கள். அப்பொழுது கவர்ன்மெண்டாரும் வெயில் காலத்திற்காக மலைக்குச் சென்றிருந்தபடியால் கவர்ன்மெண்டாருக்கு நன்றாய்த் தெரியாத இவர்களை கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்குச் சிநேகம் செய்து வைக்க வேண்டுமென்கிற எண்ணங்கொண்டு ஸின்னேட் இவர்களை வரும்படி கேட்டுக் கொண்டார். அவர் வேண்டுகோளுக்கிரங்கி இவர்களிருவரும் சென்றார்கள். அவ்விடத்தில் சில அற்புதங்கள் எல்லாம் செய்து சிலரைத் திருப்பிச் சங்கத்தில் அங்கத்தவர்களாகும்படி செய்தனள். இப்படிச் சிலகாலம் நமது தேசத்தில் இருந்துவிட்டு அப்பால் லண்டனுக்குச் சென்றனள். அங்கிருக்கும்பொழுது உலக மெல்லாம் மெச்சும் "ரகசிய சித்தாந்தம்" (Secret Doctrine) "மோன வாக்கு" (Voice of the Silence); என்னும் நூல்களையும் இன்னும் சில நூல்களையும் எழுதி அச்சுவாகனம் ஏற்றி உலகத்தார் உய்யும் பொருட்டு வெளியிட்ட

னள். இந்தியா வுக்கு வருவதற்கு முன்னமேயே. அமெரிக்காவில் பிரகிருதித் திரைநீக்கம் (Isis Unveiled) என்னும் நூல் செய்தனள். பிரமஞான சங்கத்தில் சேர்ந்தவர்களில் சாஸ்திர விசாரணை செய்து அப்பால் அப்பியாசம் செய்ய விருப்பமுடையவர்களுக்கு வேண்டி "உட்சங்கம்" என்று ஒன்று ஸ்தாபித்து அதில் வந்து சேர்ந்தவர்களுக்குப் படிப்படியாய் யோகாப்பியாச மார்க்கத்தைக் கற்பித்து வந்தனள். தனக்குப் பின்னால் தன்னுடைய ஸ்தானத்தை வகித்து உலகில் உபகாரஞ் செய்வதற்கு இப்பொழுது சரஸ்வதியின் அவதாரம் என்று எல்லோருந் துதிக்கும்படியாக விருக்கும் ஸ்ரீமத் அன்னி பெஸண்ட் அம்மையாருக்குத் தீக்ஷை பண்ணி ஞானோபதேசஞ் செய்து அப்பால் சிலகாலமிருந்து 1891ஆம் மேமீ 8உ யன்று ஸ்தூல வுடலை நீத்தனள்.

ஸ்ரீ ஹெலெனாம்பாள் திருவடி வாழ்க.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

ஸாந்தி. ஸாந்தி. ஸாந்தி.

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

இரசாயனத்திற்கு மூலம் இரசவாதம்.

இப்பூவுலகத்தில் பாவங்களதிகரித்து ஜனங்கள் பரம்பொருளைத்தியானிப்பதிலும் அவருடன் ஐக்கியமாதலிலும் தங்களுடைய கவலையைச் செலுத்தாது அநித்தியமான இகலோகவாழ்வையே பெரிதெனவுன்னித் தங்கள் நாட்களை வீணுட்களாகக்கழித்து வரும் தன் புத்திரிகள் புத்திரர்கள்மேல் சர்வலோகமாதாவாகிய பார்வதி இரக்கங்கொண்டவளாய் அவர்கள் முக்திபெறுவதற்குச் சாதனமேதென்றும்,அவர்கள் நல்வழிப்படுவதற்கும், இன்புறுதற்கும் மார்க்கங்களெவையென்றும் தம் காதலனாகிய சர்

வேசுவரனை பல வினாக்கள்வினவவும், அன்னார் அன்புகூர்ந்து கூறிய பதில் மொழிகள் "தந்திரங்கள்" எனப்பெயர்பெற்றனவாய் கூறப்பெறுகின்றன. இம்மறுமொழிகளுள் வடிகட்டல், பசுமம்செய்தல், போன்ற தற்கால இரசாயனவழிகள் அடங்கியுள. இம்மார்க்கங்களின் உதவியால் இந்துவைத்தியசாஸ்திரத்துக்கு நூதனமானவும், அபூர்வமானவும், சிரேஷ்டமானவும் பல ஔஷதங்கள் சேர்க்கப்பட்டன. இவ்வௌஷதங்களின் சிறப்போ மிகப் புகழ்ச்சியாய்க்கூறத்தகும். தற்கால பலதுறைச்சாஸ்திரங்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ஔஷதங்கள் சௌக்கியம்செய்யவியலாத பல வியாதிகளையும் சௌக்கியப்படுத்துகிறது. வேறுசில தந்திரங்களும் தாமிரம், ஈயம் போன்ற விலைசரசமான தாழ்ந்த உலோகங்களை விலையுயர்ந்தபொன் வெள்ளிபோன்ற உயர்ந்த உலோகங்களாக மாற்றலைப்பற்றிக்கூறுகின்றன. இம்மாறுதலைப்பற்றிய விஷயங்களைக்கூறும் சாஸ்திரம் இரசவாதம்.

இரசவாதத்தை விரித்துரைப்பதில் 'தாழ்ந்த' 'உயர்ந்த' உலோகங்களென்றோம். இப்பதங்களின் பொருள்களெப்படி ஏற்பட்டதென்பது அறிதற்பாலது. இரசாயனசாஸ்திரம், பிரகிருதியிலுள்ள பொருள்கள் தனிப்பொருள்களா? கலப்புப்பொருள்களா? அவ்வவைகளின் குணங்களெவை? கலப்புப் பொருள்களெப்படி உண்டாகின்றன? என்பனபோன்ற பலவிஷயங்களை விளங்கச் செப்புகிறது. இச் சாஸ்திரத்தினுதவியால் பல தனிப் பொருள்கள் நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நம்மவர்கள் தனிப் பொருள்கள் என்று கருதியிருந்த ஜலம், வாயு போன்றவைகள் கலப்புப் பொருள்கள் என்று வெளியாய் விட்டன. இந்துக்கள் வெகுகாலத்திலிருந்து பஞ்சபூதங்களை அறிந்திருந்தார்கள். பூதங்கள் இப்பொழுது தனிப் பொருள்களுக்குள்ள அர்த்தத்தில் உபயோகப்பட்டு வந்தன. பஞ்சபூதங்களெவை என்று கேட்கு முன்னமே அவை பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று எவனும் விடை பகர்வான். நம் தேசத்தவர்கள் போலவே க்ரீக் தேசத்தார்களும், சீனு தேசத்தார்களும் சில பூதங்களை அறிந்திருந்தார்கள். இப்படி மேற்கூறியுள்ள தேசத்தவர்கள் சில பூதங்களை மட்டுமே அறிந்திருக்க நாம்மட்டும் கிட்டதட்ட 100 பூதங்களை அறிந்திருக்கக் காரணமென்னவென்று சந்தேகம் ஒருவருக்குச் சகஜமாகவே உண்டாகலாம். இதற்கு விடை பகரல் மிக எளிதே. ஆனால் ஒரு விஷயம் நாம் முதலில் அறிந்துகொள்ளல் வேண்டும். தற்காலத்தில் இரசாயன சாஸ்திரத்தால் வெளியாயிருக்கும் அனுகூலங்களும் வசதிகளும் அக்காலத்தில் கிடையா. ஏதாவது ஒரு பொருள் தனியாயிருக்கவேண்டுமானால் அஃது எங்கும் பரவியிருக்கும் ஜலம், ஆகாயம் என்ற இருபொருள்களாலும் பாதிக்கப்படாமலிருக்க வேண்டும். ஜலம் அநேக வஸ்துக்களை க்ரைக்கும் சக்தி வாய்ந்தது. ஆகாயத்தில் கலந்துள்ள வாயுக்களிலொன்றாகிய ஆக்சி

ஜன் (Oxygen) நமக்குத் தெரிந்த வஸ்துக்களுள் இரண்டொன்று தவிர எல்லா வற்றோடும் கலக்கும் அபார சக்தி வாய்ந்துளது. எப்படி ஜலத்தில் சில வஸ்துக்கள் மற்றைய சில வஸ்துக்களை விடக்கரைந்து போகும் தன்மையுடையனவாயிருக்கின்றனவோ, அம்மாதிரியே ஆக்ஸிஜனுடன் சில வஸ்துக்கள் உடனே கலக்கின்றன. சில மிக்க சிரமத்துடன் சாதனங்கள் சில ஏற்பட்டால் மட்டுமே கலக்கின்றன. இதை நன்கு விளக்குவாம். ஜலத்தில் சர்க்கரை சாதாரண உப்பு போன்ற பல வஸ்துக்கள் போட்டவுடன் கரைந்து விடுகின்றன. சாதாரணமாய் நாம் உண்ணும் உப்பு சோடியம் (Sodium) என்ற ஒரு கடின பூதமும், க்ளோரின் (Chlorine) என்ற ஒரு வாயு பூதமும் கலந்துண்டாகிறது. க்ளோரின் ஆக்ஸிஜன் போல கலக்காத பூதங்கள் சிலவே. ஆனால் இது பொன்னுடன் கலந்துண்டாகும் வஸ்து ஜலத்தில் கரைகிறதில்லை. இம்மாதிரியே ஆக்ஸிஜனுடன் கரி பற்றி எரிவதில் கரி உடனே கலக்கிறது. பொன், வெள்ளி போன்றவைகள் கலப்பதற்கு மிக்க உஷ்ணம் வேண்டும். பொன், வெள்ளி, தாமிரம் போன்ற உலோகங்கள் ஆக்ஸிஜனுடன் கலக்காமலும், அவைகளின் கலப்புப் பொருள்கள் ஜலத்தில் கரையாமலுமிருக்கும் காரணங்களால் தனிப்பொருள்களாக மிக எளிதாய்க் கனிகளிலிருந்து பிரிக்கக் கூடியனவாயிருக்கின்றன. இவ்வுலோகங்களை நம்மவர்கள் பூர்வகாலந் தொட்டு அறிந்திருந்தார்கள். பொன், வெள்ளி, கம்பியாய் இழுப்பதற்கும், தகடாய் அடிப்பதற்கும், தாமிரம் பித்தளையைவிட மிக்க உபயோகமுள்ளதாயிருந்தபடியாலும், பிந்தியவைகளைவிடக் கிடைத்தலருமையாயிருந்தபடியாலும் "உயர்ந்த தாழ்ந்த" என்ற அடைமொழிகள் அவைகளுக்களிக்கப்பட்டன. முக்கியமாய்ப் பாருங்கள். நம்மவர்களிடத்தில் "நகைப்பைத்தியம்" மிகுதி யுண்டு. நகைநட்டு செய்வதற்குப் பொன் வெள்ளி எவ்வளவு உபயோகமாயும் பளபளப்பாயுமிருக்கின்றன. தாமிரம் பித்தளை நகைகள் பளபளப்புக் குன்றி விடுகின்றன. ஜலம், புளி முதலியவைகள் பட்டால் துருப்பிடித்து விடுகின்றன. இதுவும் ஓர் காரணமே. இத்தகைய குணங்களமைந்துள்ள பொன் வெள்ளி தாமிரத்தினின்றோ, பித்தளையினின்றோ உண்டாக்க வசதிகளுண்டெனில் எவன்தான் பொன் வெள்ளி மாறுதலுக்காசைப்படான். மேலும் மனிதர்கள் கூற்றுவன் கையினின்றும் விடுபட்டிருக்க விரும்புவது சகஜமே. எப்பொழுது மனிதப் பிறவி உண்டாயிற்றோ அப்பொழுதே நோயும் உண்டாயிற்று. "மனிதர்கள் பலவித நோய்களுக்கிரையாகிறார்கள்" என்றறிந்த ஔவையாரும் "நோய்க்கிடங்கொடேல்" என்று கூறினர். உடலுறும் பிணியை நீக்கும் தன்மையுள்ள வஸ்துக்களை எவன் தான் இச்சியான். பூர்வீகர்களெல்லாம் மனிதர்கள் இறந்த பின் அவரவர்களின் புண்ணிய பாவங்களுக்குத் தக்கவாறு தேவர்களாகவோ நரர்களா

கவோ ஆய்விடுகிறார்களென்ற நம்பிக்கை கொண்டவர்கள். மேலும் அவர்கள் தேவர்கள்; ஓர்வித பானத்தால் (அமிர்தத்தால் மரணமில்லாது) மரணப்பிணியை வென்று விடுகிறார்கள்; சதா காலமும் சர்வ சம்பத்துக்களையும் நிரந்தரமாய்த் துக்கமென்பதே யில்லாமல் சதா சந்துஷ்டியுடன் அனுபவிக்கிறார்கள் என்று நம்பி யிருந்தார்கள். மானிடப்பிறப்பும் இகலோகமும் பயனற்றவை யென்றும், சாசுவதமில்லாதவை யென்றும் துக்க விசாரங்கள் நிறைந்துள்ளவை யென்றும் அவர்கள் கொண்டிருந்த எண்ணம் அமிர்த பானத்தைச்கண்டு பிடிப்பதில் அவர்கள் மனத்தைச் செல்லவிட்டது. நம் தேசத்தாருக்கு அமிர்தத்தைப் பற்றியும் அதன் விசேஷ குணங்களைப் பற்றியும் கூறவேண்டுவதில்லை. எந்தப் பழைய நூலை எடுத்தாலும் இதைப்பற்றிக் கூறாமலிராது. சிலர் அமிர்தமுண்டதால் இறப்பே யில்லாமல் கொடிய செய்கைகள் புரியச் செய்த காலத்து கடவுள் அவர்களை அடக்கும் பொருட்டு அவதார மெடுத்ததாக நூல்கள் கூறும். சாதாரண பிணி சௌக்கியப் படுவதற்கே டாக்டர்களுக்கு பணத்தை வாரிவாரிக் கொடுப்பவர்கள் பெரும்பிணியாகிய மரணத்தை நீக்க வல்ல அமிர்தத்துக்கு என்ன தான் கொடார்கள்? உயிரைவிட, இழந்தபின் மறுபடியும் அடையக் கூடாத அருமைப்பொருளெதுளது? பொன் வெள்ளியாக மாற்றக்கூடிய மருந்தையும் அமிர்தத்தையும் இச்சிப்பது மனிதராசைக் குட்பட்டதே.

தந்திரங்கள் எக்காலத்தனவாயினும், பலசாஸ்திரங்களைப்போல் இரசவாதமும் நம் இந்தியாவிலே முதல் உற்பத்தியானது என்பதற்கு ஆக்ஷேபணையே யில்லை. கிரேக்க நூலாசிரியர்களும், மகம்மதிய சாஸ்திரிகளும் தங்கள் நூல்களில் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தற்காலசாஸ்திர நிபுணர்கள் இவ் விஷயத்தை அறிந்து வெளியிட்டிருப்பதால்நம்தேசத்தின் மகிமை மேகத்தால் மூடப்பட்டிருந்த பரிதிபோல் பிரகாசிக்கிறது.

ஏதாவது ஒருவிஷயத்தின் தொன்மையை அறியவிரும்புவோமாயின் அதற்கு நமக்கேற்பட்டுள்ள சாதனங்கள் பழையநூல்களே. இந்தியாவைப் பொறுத்தமட்டில் இரசவாதத்தைப் பற்றிப் பல பழைய நூல்கள் கூறுகின்றன. கந்தபுராணத்தில் ஓர் கதையுளது. அக்கதை தர்மதத்தன் என்ற ஓர் வாணிகனிருந்ததாகவும், அவன் தன் வருணத்திற்கேற்பப் பணத்தாசையுள்ளவனுதலால் ஓர் இரசவாதி அவனிடம் போந்து, உன்னிடமுள்ள திரவியத்தை என்னிடம் கொடுப்பாயாகில் அதனைக்கொண்டு மருந்து மூலிகைகள் வாங்கி உனக்கு வேண்டிய அளவு பொன் செய்து கொடுப்பேன் என்று “கூறினவுடன், அவன் நம்பித் தன் சொத்துக்களைக் கிரயப்படுத்தினதுடன் திருப்திகொள்ளாமல், தான் முன் செய்திருந்த

தர்மத்தை விற்றும் கிரையப்படுத்தி மொத்த திரவியத்தை இரசவாதியிடம் கொடுத்ததாகவும், இரசவாதி இரண்டொருநாள் மந்திரம் ஜெபிப்பதாகவும், புடம்போடுவதாகவும்கூறி வர்த்தகன் இல்லாத சமயம்பார்த்துத் திரவியத்தைக் கைப்பற்றி எங்கோ போய்விட்டதாகவும், அது காரணம் பற்றித் தர்மதத்தன் காட்டானையாய்ப் பிறந்தானென்றும்,..................." கூறப்பெற்றுள்ளது. இக்கதையால் நாம் அறியற்பாலதெவை? ஜனங்கள் இரசவாதத்தில் விசேஷ நம்பிக்கை யுள்ளவர்கள் (1), சிலர் இரசவாதிகள் என்று சொல்லிக்கொண்டு வீண் வார்த்தை பேசி ஜனங்களை ஏமாற்றி வந்தார்கள் (2). இரசாயன சாஸ்திரம் ஓங்கி வளர்ந்து வரும் இக்காலத்தில் கூட இரசவாதத்தில்நம்பிப் பலர்மோசம்போகிறார்களெனில் கல்வியாபித்திராத அக்காலத்தைப்பற்றிக் கூறுவதெவன்? இரசவாதிகளை இதைப்பற்றி வினவில், அவர்கள் மந்திரங்களும் மூலிகைகளும் தெய்வீகமானவரும் முற்றுந்துறந்தவருமான முனிவர்களுக்குக் கடவுளால் உபதேசிக்கப்பட்டதென்றும், அவர்கள் அதை எல்லாருக்கும் பகிரங்கமாய் வெளியிடக் கூடாதபடி ஆணை கொடுத்திருக்கிறார்களென்றும் இரகசியம் வெளியிடப்பட்டால் தேவ கோபத்தா லழிய நேரிடுமென்றும், மந்திரமும் பலன்பெறாது போய்விடுமென்றும் இக் காரணங்களால் முனிவர்கள் தம் சிஷ்யர்களுள் மிக்க குருபக்தி யுடையவர்களுக்கு மட்டுமே சில உறுதிவாக்குக்களின் மேல் இறக்குந்தருவாயில் கூறிப் போயிருக்கிறார்களென்றும், அத்தகைய உபதேசம் பெற்றவர்கள் இக் காலத்திலு மிருக்கிறார்களென்றும், அவர்களைக் காணக் கிடைப்பது மிகவரிதென்றும், அவர்கள் தங்களையும் தங்கள் சக்தியையும் வெளியிட மாட்டார்களென்றும் பலவிதமாய்க் கூறுகிறார்கள். சில போலிச் சந்நியாசிகள் பசுத்தோல் போர்த்த புலிபோல் வெளிப்போந்து இப்படி நம்பியுள்ளவர்களை ஏமாற்றிப் பணத்தைப் பறித்துக்கொள்ளுகிறார்கள். சிலர் இரசவாதிகளென்று சில சந்நியாசிகளை எண்ணி அவர்களைத் திருப்திசெய்து உபதேசம் பெறலாமென் றெண்ணிக் கையிலுள்ள பணத்தை அவர்களுக்கு உபசாரம் செய்வதில் செலவழிக்கிறார்கள்; சந்நியாசிகளும் வீட்டுப் பெருச்சான்போல் தின்று சௌக்கியமாய் இருந்து வருகிறார்கள். அப் பேதைகளோ ஏதோ பெரிய லாபம் கிடைக்கப் போகிறதென்று உள்ளதைப் பறிகொடுத்துக் கையிலொன்றுமிலராய் கைபிசைந்து கஷ்டப்படுகிறார்கள். இஃது எத்துணை பேதைமை?

இரசவாதமும் அதைப் பற்றிக் கூறப்பட்டனவும் நம் தேசத்துக்கு மட்டுமே என்று எண்ணக் கூடாது. உலகத்தின் பல பாகங்களிலுமுண்டு.

ஆர். இராஜமையர்.

சைவசித்தாந்தம்.

[முன் தொடர்ச்சி]

இனிச் சைவபுராணம் இருபத்து நாலாயிரங் கிரந்தமும், பவிஷ்ய புராணம் முப்பத்தோராயிரங் கிரந்தமும், மார்க்கண்டேயபுராணம் முப்பத்திராயிரங் கிரந்தமும், இலிங்க புராணம் பதினோராயிரங் கிரந்தமும் காந்தபுராணம் இலக்கங் கிரந்தமும், வராகபுராணம் இருபத்து நாலாயிரங் கிரந்தமும், வாமனபுராணம் பதினாலாயிரங் கிரந்தமும், மச்சபுராணம் பதினாலாயிரங் கிரந்தமும், கூர்மபுராணம் ஆயிரங் கிரந்தமும், பிரமாண்ட புராணம் பன்னீராயிரங் கிரந்தமும், காருடபுராணம் ஆறாயிரங்கிரந்தமும், நாரதீயபுராணம் இருபத்தையாயிரங் கிரந்தமும், வைணவபுராணம் ஆறாயிரங் கிரந்தமும், பாகவதபுராணம் பதினெண்ணாயிரங் கிரந்தமும், பிரம புராணம் பதினாயிரங் கிரந்தமும், பதும புராணம் ஐம்பத்தையாயிரங் கிரந்தமும், ஆக்கினேய புராணம் எண்ணாயிரங் கிரந்தமும், பிரம்மகைவர்த்த புராணம் பன்னீராயிரங் கிரந்தமு முடையனவாம். இதிகாசமும் ஈண்டடங்கும். சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம். விஷ்ணுபுராணம் நான்கும் தாமசங்களாம். பிரமபுராணம் இரண்டும் இராசசங்களாம். அக்கினி புராணமும் சூரியபுராணமும் திரிகுண யுத்தமாம்.

இனிச் சைவபுராணம், பிரமன் விட்டுணு இருவர் பிறப்பு இறப்புக்கள் உலக சிருட்டிகள், பிரபஞ்ச விரிவுகள், உலகமெல்லாம் சிவலிங்கத்தினின்று உற்பத்தியானமை, சிவலிங்க வழிபாடு, புண்ணிய காலம், புண்ணிய க்ஷேத்திரம், புண்ணியார்த்தம் பிரமன் விண்டு இருவரும் சிவலிங்க வயத்தராயினமை சிவலிங்க பூசை முறைமை ஆசரிக்கும் விதிகள், யோகாப்பியாசம், தீர்த்த மான்மியம், சிவாநந்நிய நிட்டாநுபூதி திரிபுராசுரர் வரலாறு, தக்கன் யாகம், விநாயக சுப்பிரமணியர் தோற்றம் முதலானவற்றையுணர்த்தும். உ. பவிஷ்யபுராணம், பிரமன் மனுவுக்கு அகோர கற்பத்தில் உலகமுளதா முறையையும், சிருட்டி பேத முதலியவைகளையும் உரைத்த முறையை உணர்த்தும். ௩. மார்க்கண்டேய புராணம். பாண்டவர் ஐவருக்கும் திரௌபதி யொருத்தி மனைவியாதற்குக் காரணமும், பலராமன் மதுமயக்கத்தினால் தான் செய்த பிரமகத்தி நிவர்த்தியின்பொருட்டுப் பிராயச்சித்தஞ் செய்தற் கேதுவும் திரௌபதி புதல்வர் ஐவருக்கும் காத்தற்றலைவனான கண்ணன் அருச்சுனன் இருவருக்கும் அகால மரணம் எய்துதற் காரணமும், உணர்த்தும். ச. இலிங்கபுராணம், அக்கினி கற்பத் திறுதியில் சிவர்க ளடையுஞ் சீலம் ஐசுவரியம் இன்பம் மோக்ஷங்

களையும், சிவலிங்க மகிமைகளையும் விரித் துணர்த்தும். ௫. சாந்த புராணம் தற்புருட கற்பத்திற் சம்பவங்களையும் அறுமுகக் கடவுளுடைய மான்மியத்தையும், விரித் துணர்த்தும். ௬ வராக புராணம், விஷ்ணுவின் வாயில் காவலராகிய சயவிசயர் வைகுண்ட லோக மெய் தவந்த முனிவனைத் தடுத்துச் சாபமேற்றுப் பூமியிற் காசிபன் திதி என்பவர் புதல்வராய்ப் பிறந்து, இரணியன் இரணியாக்கன் எனப்பெயர் பெற்றமையையும், இரணியன் மூவுலகங்களையும் வென்றமையையும் இரணியாக்கன் சுவர்க்கத்துக்குப்போய்த் தேவர்களை வென்றமையையும், தேவர்கள் வராகவுருவமுற்றிருந்த விண்டுவைவேண்ட அவ்விண்டு அவ்விரணியாக்கனைக் கொன்றமையையும், திதி என்பவளுக்கும் விண்டுவுக்கும் நிகழ்ந்த யுத்தத்தில் திதி தோற்றமையையும், விண்டு வராக ரூபத்தை நீக்கிக் கொண்டமையையும், உணர்த்தும். ௭. வாமனபுராணம், தக்கன்யாகம் இமயமலைப்பாலிலுள்ள கேதாரேசுவர புரத்து விளங்கும் சிவலிங்கப்பெருமான் மகிமை, வதரிகாச்சிரமமகிமை, காமதகனம், சரோமான்மியம், தாணு கோதாவரி தீர்த்தமான்மியம், உமாமகேசர் விவாகம், முருகக்கடவுள் திருவவதாரம், மனுவந்தர சிருட்டி, சுவாரோச்சிஷ மனுவந்தரத்தில் இருந்த தைத்தியவரசனாகிய பலிச்சக்கரவர்த்தி பரிபாலனம், அப்பலி அரசனை யடக்கவந்த வாமனமூர்த்தி வரலாறு என்னும் இவைகளை யுணர்த்தும். ௮. மச்சபுராணம், விண்டுவினது மச்சாவதார மான்மியமும், அவ்விண்டு ஜலப்பிரளயகாலத்தில் மனுவையும் பிறவற்றையும் ஓர் பேழையினுள் வைத்துக்காத்தமையும், பிரமசிருஷ்டியும், திரிபுரத்தரசர் சங்காரமும், தாரகாசுரனுக்கும், தேவர்களுக்கும், நிகழ்ந்த யுத்தமும் பார்ப்பதி திருக்கலியாணமும், முருகக்கடவுள் திருவவதாரமும், விண்டுவவதாரமுமாகிய கதைகளையுணர்த்தும். ௯. கூர்மபுராணம், ஆமைவடிவங்கொண்ட சனார்த்தனன், இருடிகளுக்கும், இந்திரத்திம்மனுக்கும், அறம், பொருள் இன்பம், வீடென்னு முறுதிப்பொருள் நான்கனையும் மொழிந்த வரலாறு உணர்த்தும். ௰. பிரமாண்டபுராணம், பிரமன் பிரமாண்டத்தின் மகிமையையும், இனிவருங் கற்பங்கடோறு நிகழும் கதைகளையும் சொல்லிய வரலாறு [illegible]ணர்த்தும். ௰௧. காருடபுராணம், உலகசிருஷ்டியின் சங்கிரகம், விரதவிவரணம் சமயாச்சாரம், சோதிடம், புண்ணியக்ஷேத்திரம், சாமுத்திரிகாலக்ஷணம், இரத்தின விசேடம், ஔஷத முதலியவற்றை யுணர்த்தும். ௰௨. நாரதீயபுராணம் விண்டு தோத்திரங்களையும் அவ்விண்டுவினை ஆராதனை செய்தற்குரிய புண்ணிய காலங்களையும், துருவர் பிரகிலாதர் கதைகளையும், மோகினி கதைகளையும் உணர்த்தும். ௰௩. விண்டுபுராணம் உலக சிருட்டியையும், பிரமனுடைய புதல்வர்களாகிய மரீசி, அத்திரி, ஆங்கிரசு, புலத்தியன், புலகன், கிரது,

வசிட்டன், தக்கன், பிருகு என்னு மிவர்களால் சீவர்கள் உலகத்தில் படைக்கப்பட்டுப் பெருகினமையையும், கற்பகாலத் திறுதியில் நிகழும் சங்காரத்தையும், பிரதி சர்க்கத்தையும், மனுவந்தரத்துள்ள அரசர் பரிபாலனங்களையும், பலவகைப்பட்ட உலகங்களையும், கிரக மண்டலங்களையும், சப்த கண்டங்களையும், அவற்றைச் சூழ்ந்த சப்த சாகரங்களையும், வியாசபகவான் வேத புராண இதிகாசங்களை ஒழுங்குபெற அமைத்த முறைகளையும், சாதி ஒழுக்கங்கண் முதலியவற்றையும் அரசர்களுடைய பரிபாலனங்களையும், அவர்கள் இராச்சியங்களையும் கண்ணனுடைய சரித்திரத்தையும் திரேதாயுக முதல் கலியுகம் வரையும் மனிதர் முறையால் தீச்செயல்களில் தலைப்பட்டு அவற்றாலெய்தும் சலப்பிரளய அக்கினிப் பிரளயங்களினால் அழியு மாறுகளையும், கற்பகாலத் திறுதியில் எய்தும் உலக ஒழிவையும் உணர்த்தும். ௧௪. பாகவத புராணம், அத்தினபுரத் தரசனான பரீச்சித்து என்பவர்க்குச் சுகமுனிவன் மரணத்தைக் கடக்கு முபாயங்களை விரித்து அறிவிக்குமாறு உணர்த்தும். ௧௫. பிரமபுராணம் உலக சிருட்டியையும் மனுவந்தரங்களையும் கண்ணன் காலபரியந்தம் இருந்த சூரிய சந்திர குலத்து அரசர்களையும் சூரியன் சிவபிரான் சகநாதர் திருக்கோயில்களையும், திருநந்தன வனங்களையும், சகநாத மான்மியத்தையும், உணர்த்தும். ௧௬. பதுமபுராணம், உலக சிருட்டி செய்யும் பொருட்டுப் பிரமன் ஓர் பதுமத்திலே தோற்றிய கதைகளையும், எல்லோருஞ் சென்று தரிசனம் செய்தற்கும் உரிய ஆலயங்களையும், தீர்த்தங்களையும், பூமிக்கு மேலுள்ள அண்ட விரிவுகளையும், நாகருலகங்களையும், தீர்த்தமாடற் புண்ணியங்களையும், இலக்குமி நாராயணர் பொருட்டுச் செபிக்கற் பாலனவாகிய மந்திர முதலியவற்றையும் புலனுணர்த்தும். ௧௭. ஆக்கினேயபுராணம், விண்டுவின் அவதாரங்களையும், சிவபெருமானைக் குறித்துச் செய்யும் ஞான பூசையையும், பிரபஞ்ச விவரணங்களையும், அரசர் கடன்களையும், உணர்த்தும். ௧௮. பிரமகைவர்த்த புராணம், கண்ணன் மகிமையையும், பிரமவராகர் கதைகளையும், உணர்த்தும்.

இனி ஆறு சாஸ்திரங்களாவன:— சிக்கை, கற்பசூத்திரம், வியாகரணம், நிருத்தம், சந்தோ விசிதி, சோதிடம் என்பனவாம். வேதங்களையெடுத்தல் படுத்தல் முதலிய விசை வேறுபட்டா னுச்சரிக்குமா றுணர்த்துவது சிக்கை. வேதங்களிற் கூறுங் கருமங்களை யநுட்டிக்கு முறைமை யுணர்த்துவது கற்பசூத்திரம். வேதங்களி னெழுத்துச் சொற்பொருளியல்புணர்த்துவது வியாகரணம். வேதங்களின் சொற்பொருளுணர்விப்பது நிருத்தம். வேத மந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின்

பெயரும், அவற்றிற் கெழுத்து இணைத்தென்றலு முணர்த்துவது சந்தோவிசிதி. வேதத்திற் கூறுங் கருமங்கள் செய்தற்குரிய கால விசேடங்களை யுணர்த்துவது சோதிடம்.

இனி அறுபத்து நான்கு கலைகளாவன:—க. கீதம். உ. வாத்தியம். ௩. நிருத்தியம். அதாவது அபிநயம். ௪. நாட்டியம். ௫. சித்திரமெழுதல். ௬. கை எழுத்து. எ. தச்சுவேலை. அ. கிரக நிருமாண சாத்திரம். ௯. இரத்தினப் பரீக்ஷை. ௰. உலோக பரீக்ஷை. ௰க. விருக்ஷ ஆயுர்வேதம் ௰உ. நற்செங்கற் பொடிகளை இரத்தினமாக்கல். ௰௩. ஆடு கோழி வான்கோழி இவைகளின் யுத்த விதி. ௰௪. சுகசாரிகப்பிரலாபனம் அதாவது கிளி நாகணவாய்ப் பறவைகளைப் பேசுவித்தல். ௰௫. தேச ஞானம். ௰௬. பாஷாஞானம். ௰எ. சூதசாஸ்திரம் அதாவது சமையல் விதி. ௰அ. ஆகரக்ஞானம் அதாவது புதையலறிதல். ௰௯. இயந்திரஞானம் அதாவது இயந்திரம் போடவேண்டிய விதங்களை யறிதல். உ௰. யாப்பிலக்கணம். உக. சூதாடலையுணர்தல் உஉ. காமசாஸ்திரம். உ௩. பாடல்செய்ய வேண்டிய விதங்களை யுணர்தல். உ௪. சப்தசுரங்களை யுணர்தல் உ௫. சகுனம்பார்த்தல். உ௬. இரசவாதம் உஎ. கன்னியாவாதம். அதாவது மண்ணைப்பரீக்ஷித்து தங்கமாக்குதல். உஅ. சாமுத்திரிகாசாஸ்திரம். உ௯. அசுவாதி இலக்கணங்களை யுணர்த்தும் நூல். ௩௰ சாரத்தியஞானம் அதாவது தேர்முதலியன நடாத்தல். ௩க. மிருகவைத்தியம். ௩உ. வாள்யுத்தம். ௩௩. அக்கினித்தம்பம் ௩௪. நீர்த்தம்பம். ௩௫. காயசித்திபண்ணல். ௩௬. வயத்தம்பம். அதாவது தனக்குரியவயதை எப்போதும் நிலைநிறுத்துதல். ௩எ. உதககாதம். அதாவது ஜலத்தில் நீந்துதல். ௩அ. இந்திரஜாலம் ௩௯. மணிசித்தி ௪௰. மந்திரசித்தி. ௪க. ஔஷதசித்தி. ௪உ. பாதுகாசித்தி. ௪௩. அஞ்சனம் அதாவது மைபோட்டுப்பார்த்தல். ௪௪. சுரவஞ்சனம். அதாவது மிருகம் பக்ஷி முதலியவைகளைப்போல் ஒலித்து அவைகளை வரவழைத்தல். ௪௫. கிருஷி அதாவது விவசாயம். ௪௬. வியாபாரம். ௪எ. யுத்தகௌசலம். அதாவது யுத்தம் செய்தல். ௪அ. வித்வேஷணம் அதாவது சூனியம் வைத்தல். ௪௯ உச்சாடனம் அதாவது பிசாசுமுதலியன ஓட்டல். ௫௰. பாஷண்டசமயஞானம். அதாவது நாஸ்திகமதங்களையுணர்தல். ௫க. நகத்தைக்கொண்டு உருவவிலக்கணங்களை யுணர்தல். ௫உ. பல்லைப்பார்த்து உருவகுணங்களைச் சொல்லல் ௫௩. சுழிகளைப்பார்த்து பலன் சொல்லல் ௫௪. தூங்கும்படி செய்தல் ௫௫. லிபிலிகௌசலம். அதாவது எல்லாப்பாஷைகளின் எழுத்துக்களையும் எழுதுதல். ௫௬. ஓஷதி சொரூபக்ஞானம். எல்லாப்பச்சிலைகளின் உருவங்களை யுணர்தல். ௫எ. சர்ப்பவசீகரம். ௫அ. வியாக்கிராதி ஸ்தபனம். அதாவது புலி முதலியவைகளைக்கட்டல். ௫௯. விஷமிறக்குதல் ௬௰. பூஷணகரகௌசலம்.

அதாவது ஆபரணமுதலியவை செய்தல். ருக ஸ்திரிபுருஷவசீகரணம். ருஉ. மல்லயுத்தம். ருரு. வாக்குத்தம்பம். ருச. இரேகைஞர்னம். ஆக அறுபத்து நான்குகலைகளும் உணர்ந்துகொள்க. இவற்றின் விரிவை சைவ தந்திரத்திற்காண்க.

சுத்தமாயையியல்பு முடிந்தது. இனி அசுத்தமாயையியல்பு.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

வேதாந்த சித்தாந்த தாரதம்மியம்.

அநாதியே ஆன்மக்களைப் பற்றியுள்ள பாச நீக்கத்தின் பொருட்டுச் சிவபிரானாற் செய்யப்பட்டன வேத சிவாகமங்கள் இரண்டாம். இவ்விரண்டும் முதல்வன் அருள் வழிநின்றோராற் செய்யப்படும் நூல்களின் ஒன்றாக வைத்தெண்ணுதற்கு ஒருவாற்றானும் இயைபின்றி அவையனைத்திற்கும் முதனூலாக விளங்கும். அற்றேல் முதல்வனாற்றரப்படும் முதனூலை ஒன்றாக வைத்தெண்ணாமல் இங்ஙனம் இருவகைப் படுத்தது யென்னை யெனின், முதல்வன் பெருங்கருணை யுடையனாதலின் உலகருய்தற்பொருட்டும் சத்திநிபாதருய்தற்பொருட்டும் திருவுள்ளத்தில் கருதி முறையேவேதமும் சிவாகமும் செய்யப்பட்டனவாதலாலென்க. அவையிரண்டும் முறையானே பொது நூல் சிறப்பு நூலெனப்பட்டுவேதம் கரும காண்டம், ஞானகாண்டம் என இரு காண்டங்களாகவும், ஆகமம் தந்திரகலை மந்திரகலை உபதேசகலை யென மூன்றுகலைகளாகவும் விளங்கும்.

இங்ஙனம் வேதாகமத்தைப் பொதுச் சிறப்பென்று பகுத்தினால் வேதத்தைச் சாமான்ய மென்றும் கொண்டு ஆகமத்தின் றும் வேதத்தை தாழ்த்திக்கூற வருமே, வரின் வேதாகமங்களுக்கு ஒரு சிறிதும் பேதமில்லை யென்று சதுர்வேத தாற

புரிய சங்கிரகாதிகளில் யெடுத்தோதியற்குமுரணுமே, யெனின் முரணாது; அதனை விளக்குதும். வேதம் உலகருக்கும் ஆகமம் சத்திநி பாதருக்கும் என்பதை இரட்டுற மொழிந்து பொருள் கொள்ளல்வேண்டும். யாங்ஙனமெனின் உலகரென்பது பிழை பொறுத்தல் உபகாரம் செய்தல் காப்பாற்றல் முதலானவை யுடைய சாமான்யரையும் "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" என்னும் ஆன்றோர் கருத்தின்படி சாதன சதுஷ்டய சம்பன்னரான ஞானாதிகாரிகளையும் குறிக்கும் சத்திநி பாதரென்பதும் மந்ததரம் மந்தம் தீவரம் என்னும் சரியை கிரியை யோகவழி ஒழுகுவோரையும் தீவரதரமாகிய ஞானவழி ஒழுகுவோரையும் குறிக்கும். இங்ஙனம் வேதாகமங்களில் விரவிக்கிடத்தலின் வேதத்தில் சாதன சதுஷ்டய சம்பன்னருக்காகச் சொன்ன ஞானகாண்டப் பொருள்களைத் தெரிந்தெடுத்து வேதாந்த மென்றும், ஆகமத்தில் தீவிரதர சத்திநிபாதருக்காகச் சொன்ன உபதேசகலைப் பொருள்களைத் தெரிந்தெடுத்து சித்தாந்த மென்றும் இரு பகுப்பான நூல்களாக்கிப் பெரியோர் தந்தனர். சத்திநிபாதம் நால்வகை யினதென்பதை உண்மை நூல்களிற் காண்க. சித்தாந்த சாத்திரமாகிய ஞான நூல் தீவரதரசத்திநிபாதர்க்கே யென்பதைச் சிவஞான போதச் சிறப்புப் பாயிர உரையில் "முன்னர் தீக்கையுற்றுச் சிவாகமங்களை ஓதி அதன் பின் சரியாபாத முதலியவற்றை ஆராயும் நூல்களை முறையே கேட்டு அவ்வாறொழுகி மனந்தூயராய் நித்தியா நித்திய உணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடு பேற்றின் அவா மிக்குடையராய் வந்த அதிகாரிகளுக்கு இன்னூலுணர்த்துகவென்பது போந்ததெனக் கொள்க" என்றெழுதியவாற்றால் இனிது தெளிக.

வேதாந்த நூல்களில் அதிகாரி இலக்கணம் கூறுமிடமெல்லாம் நித்தியா நித்திய வஸ்துவிவேகம் இகமுத்திரார்த்த பாபோக விராகம் சமாதி சட்க சம்பத்து முமுட்சுத்துவ என்னும் நான்கு சாதனமுடையாரையே அதிகாரிகளாக கூறுகின்றன. இச்சாதனம் நான்கும் சரியைகிரியை யோகத்தி பின்னர் நிகழுமென்பதை மேற்கூறிய சிவஞானபோத உ

யாற்றெளிந்திடுக. வேதாந்த நூலாகிய ஞானவாசிட்டத்தில் "சரியை கிரியாயோகப் பதத்தின்முற்றி சாதனங்கணிறைந்த வர்க்கே சாற்றல்வேண்டும்" எனவும் விஞ்ஞானசாரத்தில் சத்திநிபாதத்தால் சித்தசுத்தியும் சித்தசுத்தியால் நான்கு சாதனமும் உண்டாமென்னும் கருத்தமைந்து "சித்தம் பிரகாசத்தைய்யுறிற் சேருநான்கு சாதனமும் சத்திநிபாதந் தான்பிறக்கிற் சாருமொழிசித்தந்தனிலே" எனவும் கூறியவாற்றால் சரியை கிரியை யோகங்களை உடன்பட்டும் அதற்கு மேற்பட்ட நான்கு சாதனங்களையுடைய ஞானதிகாரிகட்கே இன்னூலுணர்த்தற்பாற்றென்றும் காட்டினமை இனிது தெளிக. தெளியவே வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இரண்டு நூல்களும் அதிகாரபேதமில்லையென்பது பெறப்படும். பெறவே பயனாகிய முத்தியும் ஒன்றேயென்பது வெள்ளிடைமலைபோல் தெள்ளிதி னுணரப்படுவதொன்றாம்.

அற்றாயின் இவ்வேதாந்த சித்தாந்தங்களுக்கு முதநூல்களாகிய வேதாகமங்களை முறையே பொது சிறப்பென்று பகுத்ததின் கருத்தென்னையெனின் வேதம் ஞானதிகாரிக்கும் சாமான்யருக்கும் உரித்தாதலால் பொதுவென்றும், ஆகமம் ஞானதிகாரிகளுக்கே உரித்தாதலால் சிறப்பென்றும் பிரிக்கப்பட்டனவென்க. சரியை கிரியை யோகவழி ஒழுகுவோரும் ஞானதிகாரிகளாவ தெங்ஙனமெனின் அழியுந்திறனுடைய காமியங்களைப்பயப்பித்து மெய்ஞ்ஞானத்தை நிகழவொட்டாது தடைசெய்யும் வேள்விமுதலாயின போலாது சாலோகாதி பதங்களைத்தந்து தத்துவஞானத்தையும் சரியை கிரியை யோகங்கள் தருமாதலால் அவற்றை யனுட்டிப்பவர் ஞானதிகாரிகளேயாவரென்க. இதனைச் சிவஞான போதமுதலிய உண்மை நூல்களிற் கண்டுகொள்க.

இங்ஙனமாகவும் வேதாந்த நூல்களை மாயாவாதமென்றும் சித்தாந்த நூல்களைத் துவிதவாதமென்றும் கூறுதல் பெருங்குறையன்றோ. இக்குறை இன்று வந்ததன்று. தொன்றுதொட்டே நிகழ்ந்து வந்தது, வருகின்றது. அது பொருந்தாதென்பதை "கயிற்றரவும் கட்டையினிற் கள்ளனும் போன் மாயா

மயக்கமற்ற வேதாந்த வாழ்வு, முயற்சிகெட்ட, ஆனந்தாதீதத் தேயானவாரமாகமமும், தானந்நிறைக்குச்சமன்" என்றஒழிவி லொடுக்கத் திருவெண்பாவாற்றெளிக. சித்தாந்த நூல்களில் "வேதாந்தத் தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்" வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் என்பனவாதிய எடுத்தாண்டிருப்பதால் சிலர் வேதாந்தம் உடன்பாடென்றும் அது வடமொழியிலே தானுள்ளது தமிழிற் கிடையாது வட மொழியிலே யுள்ள வேதாந்தமும் முழுதும் குற்றமற்றதா யில்லை; ஆதலின் அவ்வேதாந்தத்திலுள்ள குற்றமற்ற பொருளை தெரிந்தெடுத்துக் கூறுவது சித்தாந்தமென்றும் இவ்வாற்றால் சித்தாந்தமே உயர்வென்றும் கூறுகின்றனர். வேதாந்தத்துக்குச் சிறப்படையாகச் சொன்ன தீதில் தெளிவாம் என்ற சொல்லின் உண்மையை உணராது மயங்கிப் பொருள் கொள்பவருக்கு என் சொல்வது.

இனி வேதாந்த நூல்கள் தமிழிலே இல்லையென்பார் கூற் றையும் விசாரிப்பாம். இந்நாடு தமிழ் நாடாகவும் தொன்று தொட்டுத் தமிழ் வித்துவான்கள் பலர் இந்நாட்டில் இருந்து வந்திருக்கவும் வரவும் வேதாந்த நூல்கள் தமிழிலே இல்லையெ ன்றும் இருத்தல் கூடாதென்றும் கூறுவது சூரியனுக்கு ஒளி யில்லை இராது யென்றல்போலும். அன்றியும் சித்தாந்தநூல்கள் தமிழிலே இருக்கக்கண்டும் வேதாந்த நூல்களும் அங்ஙனமிரு க்குமென்று உணர அறியாதாற்கு யாது சொல்லியும் பயனெ ன்ன? இங்ஙனம் தமிழிலேயுள்ள வேதாந்த நூல்களை மாயா வாத நூல்களென்று கூறுபவரெல்லாம் வேதாந்த நூல்களை முறையாக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தவரல்லர். அம்மட் டோ சித்தாந்தநூல்களையும் நுணுகி ஆராய்ந்திலரென்றே துணி வாய்க் கூறலாம். ஏனெனின் சித்தாந்த நூல்களில் தமிழிலே யுள்ள வேதாந்த நூல்களின் பேரை யெடுத்தாண்டு மாயாவாத நூலென்று யாண்டும் கூறக்கண்டதில்லை. அங்ஙனமாகவும் வேதாந்த நூல்களை மாயாவாதமென்று எவ்வாற்றாற் கூறுகின் றீரென வினவின் சிவஞான சித்தியார் பரபக்கத்தில் பாஞ்சரா த்திரமத மறுதலையில் "பார்த்தனுரிரதமேறி..................

....மால் கொல்லச் செப்பும் வார்த்தை நூலாக்கிக்கொண்டாய் புரங்கொனூன் மதித்திடாயே" எனக் கூறி இருத்தலின் பகவற்கீதை மாயாவாதமென்றும் ஏனைய நூல்களும் இதுபோன்ற மாயாவாதமேயென்றும் விடை தருகின்றனர். இவ் விடையானே இவர் சைவ சாஸ்திரத்தை நன்கறிந்திலரென்பது தோற்றம். சிவஞானசித்தியார் பரபக்கத்துள் மாயாவாத மதமும் அதன் மறுதலையும் கூறப்பட்டுள்ளன. அம் மறுப்பில் இந்த நூல்களின் பேரையெடுத்தாண்டு கண்டிக்கவில்லை. அங்ஙனமாகவும் பகவற்கீதையை வேதாந்திகள் கொள்ளும் கருத்து வேறு பாஞ்சராத்திரிகள் கொள்ளும் கருத்து வேறு என்பது பிரத்யக்ஷமான தொன்றும். அன்றியும் சிவஞான போதத்தில் "அருச்சுனற்குக் கீதை நூல் செவியறிவுறுத்த கண்ணன் யானே உலகெல்லா மாயினேன் யென்றதூஉம், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் காட்டியதூஉம் ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக என்றதூஉம், அதனை உறுதியாகக் கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்துநோக்கிச் சாங்காறும் சிவபூசை செய்ததூஉம், கண்ணன்மே லிட்டபோது கள் முதல்வன் றிருமுடிமேற் கண்டதூஉமென்க" என்று கூறியவற்றை உற்றுநோக்கின் வேதாந்திகள் கொள்ளும் கருத்தும் வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் உள்ள ஒற்றுமையும் நன்கு விளங்கும். சிவஞானபோதம் 9-வது சூத்திரம் 3-வது அதிகரணத்தில் சிகர யகர வகரங்கள் மூன்றும் முறையே தற்பத தொம்பத அசிபதப் பொருளுமா முறைமை நோக்கி யென்றும் சிவஞான சித்தியாரில் "பண்டை மறைகளுமது நானென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே" எனவும் கூறியவாற்றால் வேதாந்த சித்தாந்தங்களுக்கு ஒரு சிறிதும் வேற்றுமை யின்றென்பது இனிது தெளிக.

இங்ஙனமாகவும் பாஞ்சராத்திரமத மறுதலைச் செய்யுளைக் கூறி வேதாந்த நூல்கள் மாயாவாத நூல்களென்று விடை

கூறுவது தருக்க முறையாமா? இவ்விடை மாயாவாதியை மறுக்குமானல் மாயாவாதி மறுதலையில் நூலாசிரியர் கூறுது விடுவாரா! முன்னோர் கருத்தை நன்காராயாது இங்ஙனம் கூறுவது எவ்வாற்றானும் பொருந்தாதென்பதை யூகித்துணர்க. அன்றியும் இவ்விடை யெதுபோலு மென்னின் வட திசை நோக்கிச் செல்லும் ஒருவன் காசி யெங்ஙன மிருக்கின்றதென ஒருவனைக் கேட்பின் தெற்கே இருக்கின்ற தெனக் கூறி அதற்கு நாழிகைக் கல்லை சான்று கூறுதல் போலுமென்க. அந்தோ பாவம்! முன் காசிக்குப் போகாதவனாகவும், போனவரையாவது தெளிவாய் விசாரித் துள்ளவரையாவது சந்திக்கப் பெறாதவனாகவும் இருந்தால் என் செய்வன்? நாழிகைக் கல்லிலோ தெற்கு வடக்கு யென்று யெழுதி இருப்பதில்லை காசியே நான் கண்டதில்லை கேட்டது மில்லை யென்று கூறிவிட்டால் அவனுக்கு மயக்கம வாராதல்லவா? இவ்வாறே நூல்களின் பொருள்களை உள்ளவாறுணராது திரித்துணர்ந்து அவ்வுணர்ச்சியே மெய்யுணர்ச்சி யெனப் பிறருக்கு உபதேசிக்கவும் தலைப்படுவது பெருங் குற்றமாகும். இவர் கதி யெவ்வாறுயினுமாக. பிறரும் உண்மையறியா துழலத்துணை நிற்கின்றனர். சிவஞான சித்தியாரை முறையாய்ப் பாராது அந்நூலில் நம்பிக்கை யுடைய ஒருவனுக்கு இச்செய்யுளைச் சொல்லி இது சிவஞான சித்தியாரிலுள்ளது எனக் கூறின் அவன் யென் செய்வன்? இனி மாயாவாதி மதத்துக்கு நூல்தான் எது வெனின் அதை விரிக்கிற் பெருகுமர்தலானும் ஈண்டெடுத்துக்கொண்ட விஷயம் அஃது அன்றாதலாலும் அதனை மாயாவாத மென்று தலைப்பெயரிட்டு அவகாசம் கிடைத்துழி பின்னர் விளக்குவாம்.

இனி அருட் செல்வராகிய குமரகுருபர சுவாமிகள் "ஒரும் வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த ஆராயின்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்த" மென்று கூறி இருத்தலின் வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் வேற்றுமை உண்டென்று சிலர் கூறுவர். அவரும் சுவாமிகள் கருத்தை உணராது கனி வேறு சாரம் வேறு என்று பொருள்கொண்டு மயங்கினர். "பண்ணையு மோசையும் போலப் பழமதுவும் என்

ணும் சுவையும் போல்" என்னும் சிவஞானபோதத் திருவெண்பாவைக் கடைப்பிடித்துச் சுவாமிகள் கருத்தைத் தெளிக.

இனி பொருள் உண்மையைப்பற்றியும் சாதனத்தைப்பற்றியும் முத்தியைப்பற்றியும் வேதாந்த சிந்தாந்த நூல்களில் ஒரு சிறிதும் வேற்றுமையின் றென்பதை விளக்கப்புகின் விரியுமாதலின் விரிவஞ்சி விடுத்தாம். இனி சிவஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் சைவசமயமே சமயமென்று கூறி இருக்கின்றமையின் சைவசமயமாகிய சித்தாந்தமே மேற் சமயமென்றும் ஏனைச் சமயங்கள் இதற்குச் சமானமாகாவென்றும் சமானமாகாத ஏனைச் சமயங்களுள் வேதாந்தம் மேலென்றும் சிலர் கூறுவர். சிவத்தை முதலாகக்கொள்வது சித்தாந்தம். பிரமத்தை முதலாகக்கொள்வது வேதாந்தம். சிவம் பிரமம் என்பன ஒரு பொருட்கிளவி. ஆகவே இவ்விரண்டும் சைவசமயமே யென்பது தாயுமானசுவாமிகளின் கொள்கை. இதனை "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர் கணமே" யென அவர் கூறியவாற்றுற்றெளிக. அன்றியும் "கைவல்லிய ஞான நீதி நல்லோருணர்க்கிலோ கரும முக்கியமென்று நாட்டுவேன்" என மற்றோரிடத்தில் அவர் கூறியவாற்றுல் கைவல்லியத்தை ஞான நூலாக ஒப்புக்கொண்டாரென்பதும் இனிது புலப்படுகின்றது.

இத்துணைவும் கூறியவாற்றுல் வேதத்தின் முடிவாகிய வேதாந்தமும் ஆகமத்தின் முடிவாகிய சித்தாந்தமும் ஒரு கருத்துடையன என்பதூஉம் இரு நூல்கட்கும் அதிகாரிபேத மின்றென்பதூஉம் உண்மையறிவுடையார் இரண்டையும் சமமாய்க்கண்டு மகிழ்வரென்பதூஉம் பெற்றும்.

பொ. மு. முத்தயபிள்ளை,
உப அக்கிராசனதிபதி,
சைவசித்தாந்த சபை, தூற்றுக்குடி.

முன்னோக்கிச் செல்க.

இஃது இரண்டு சொல்லினுள் அடங்கும் சிறியதோர் வாக்கியமாயினும், நற்செய்கைக்குத் தூண்டுகோலாகி வெற்றிக்கு வழிகாட்டும் பெருமையை உடையதாகும். தோல்வி யென்பதை அறியாத வெற்றி வீரராகிய நெபோலிய சக்கிரவர்த்தியின் வெற்றிச் செய்கைகளுக்கெல்லாம் இதுவே இரகசிய காரணம். எவ்வகை இடையூறுவரினும், அதைரியம் நேரினும் முன் வைத்த காலைப் பின்வாங்காமல் முன்னோக்கியே செல்க. நெபோலியன் ஒருவனே. என்னை ? உலகில் தோன்றிய வெற்றி வீரர்கள் எவ்வகையோரின் வெற்றிக்கும் இதுவே காரணம். அற்புதமான அரிய வெற்றிகளையும், ஒப்பற்ற செல்வமும் கல்வியும் பெறுவிக்கும் அரிய செயல்களையும் உள்ளபடி நிறுத்து மதித்து நிர்ணயித்தற்கு இதுவே கருவியாகும். முதியோர் இளைஞர் உயர்ந்தோர் இழிந்தோர் அதிர்ஷ்டசாலிகள் அதிர்ஷ்டவீனர்கள் யாவர்க்கும் இதுவே வேதவாக்கியமாகக் கொள்ளத்தக்கது.

“முன்னோக்கிச் செல்க.” ஒரு பொழுதும் அதைரியம் அடையற்க. வானமெங்கும் மழையும் காற்றுமாகித் திக்குத் திசை தெரியாமல் செல்லும் நெறியை எவ்வளவு இருள் நிறைந்திருப்பினும் எதிர்ப்படும் இடையூறுகள் எத்தனை பெரியவாயினும், அபஜயங்கள் அடிக்கடி எத்துணையடுத்தடுத்து நேருமாயினும், ஊக்கத்தைக் கைவிடாமல் “முன்னோக்கிச் செல்க.”

இன்றைத்தினம் நல்லதிர்ஷ்டம் உன்னைக்கைவிட்டு மோசம் செய்யினும் நாளைக்கு நீ உன் திறத்தில் உண்மையாக நடந்துகொள்க. உன் செல்வம் உன்னைவிட்டுப் பிரிந்துபோயினும் அதனாற் கண் பனித்துக் கவலைகொள்ளற்க. எழுந்துநின்று இடுப்புக்கட்டிக்கொண்டு செயன்மேற்கொண்டு அடைந்த நஷ்டத்தை முன்னிலும் மிகுந்த ஊக்கத்தானும் முயற்சியானும் மீட்டுக்கொள்க. உனக்குத் துர்ப்பாக்கியத்தால் வாணிபத்தில் நஷ்டம் வரின் எல்லாம் முழுகிப்போயிற்றென்றதைரியப்பட்டுக் கைகளைக் கட்டிக்கொண்டு வாளா திறையற்க. ஊக்கம்கொண்டு தீவிரப்பட்டு முன்னிலும் மும்மடங்கு முயற்சியை மேற்கொள்க.

நீ நம்பியிருந்தவர் உன்னை மோசடியாகக் கைவிடினும் அதனால் அதைரியம் அடைந்து அழுது பொழுது போக்கற்க. “முன்னோக்கியே விரைக.” வேறொருவரைச் சென்று துணைகொள்க. அல்லது அதனினும் நன்றாகப் பிறர் துணையைக் கருதாது உன் முயற்சியையே உனக்கு நற்றுணையாகக்

கொள்க. நேற்றைய மதியீனம் இன்றைக்கு உனக்கு மதிபுகட்டுவதாருக. உன் மனோரதமெல்லாம் பாலையிற்பாய்ந்த நீர்போலக்கெட்டு நிறைவேருமற் போயினும் நீ அதனுற் சோர்வடைந்து மனமெலிந்து வருந்துதலொழிக. அழகிய மருதம் உனக்கு முன்னே உள்ளது. நீ விரும்பி முயன்று முன்னேக்கிச் சென்றால் அதனை அடையலாகும்.

மற்றொருவன் உனக்கு வஞ்சகம்புரிந்து கெடுதிவிளைக்கின் உனக்கு நீயும் வஞ்சகம் செய்துகொண்டு அக்கேட்டினை விருத்தி செய்யற்க. உலகம் தன் எழிலையும் இன்பையும் இழந்த தென்றியம்பற்க. அங்ஙனமன்று. அங்ஙனம் ஆயினும் நீ தைரியமும், உண்மையும், தெய்வபத்தியும் ஒருங்கு பெற்ற உன் நல்வாழ்க்கையினால் உனக்கு அவ்வுலகம் எழிலும் இன்பும் இசைந்ததாக இயற்றிக்கொள்க.

* மூன்று சட்டங்கள்

நேரிசை வெண்பா.

1. ஆயும்அறி வில்லாத கீழ்மக்கள் ஆசரிக்கும்
தீய அதமமுறை செப்புகயா—தேய
இடர்ஒன் றுனக்கிழைப்பின் ஏனையோர் நீயும்
படர்ஒன்றச் செய்திஎனல் பார்.

2. புத்திவலி யோடுலகப் பற்றுடையார் பூண்டொழுகும்
மத்திமமாம் சட்டம் வழுத்துகயா—தித்தறையில்
நன்கொன் றுனக்கொருவர் செய்யின்அதை நாடிஅவர்க்
கங்கு புரிந்திடெனல் ஆம்.

3. மெய்ந்நெறியிற் பேராத மேலோர்கொள் உத்தமமாம்
அந்நெறிதான் யாதொன் றறைந்திடுக—இன்னல்
பிறர்ஒன் றுனக்கிழைப்பிற் பெட்பினொடு நன்மை
உறஅருள்க என்ப துணர்.

எஸ். முத்து ஐயர்.

---

* மேற்பாடல்களில் அதமர், மத்திமர், உத்தமர் ஆசரிக்கும் நெறிகள் கூறப்படுவன. முன்னிரண்டையும் நீத்து உத்தமர் மார்க்கத்தையே அநுட்டித்தல் வேண்டு மென்பது கருத்து. ஒவ்வொரு பாடலிலும் முன்னிரண்டடியும் வினு: பின்னிரண்டும் விடை.

* நான்காம் ஹென்றியின் துயிற் புலம்பல்

துயிலே! இனிய துயிலே! அன்புடன்
பிரகிருதியினைப் பேணும் நற்றாயே!
இன்னெப்பொழுதும் என் இமைகளைப் பொருத்தியான்
நிர்ச்சிந்தனையா நித்திரை கொள்ளா
திருக்கச் செயலினை! 1வெருட்டிய தெங்ஙனம்?
செறும் பொருள் படைத்த பெருமகார் தம்முடை
மணம் மிக ஊட்டிய மாளிகைக் கண்ணே,
விலைமதித் திடவொணு விதானத்தின் கீழ்
இன்னிசைக் கீதம் இசைத்திடச் சயனியா
ததிபுகை மண்டிடும் அற்பக் குடிசையில்
மெய்யெலாம் வருத்தும் வெய்யபுன் 2பாயலில்
செவிக்கண் கொசுகினம் சில் தாராட்டிட
அடங்கி முடங்கிக் கிடப்பதென்? துயிலே
மந்த தேவதையே! மன்னவர் 3அமளியை
விழித்துக் காப்பவர் வீடே யாகவும்
4எச்சரித் திடும் மணி என்னவும் ஆக்கி
அருவருக்கத் தகும் அமளியின் பேரில்
ஏழைகளுடன் நீ ஏன் அமர்ந்திடுவை?
பார்க்கச் சுழற்றுயர் பாய்மரம் தன்னின்
மேல் இருக்கும் சிறு மாலுமி கண்களை
இறுகப் பொத்தி இன்னவன் புந்தியை
அடங்கா முரட்டலை யாம்தொட்டிலிலும் அம்
மு[illegible]ச் சுருட்டிச் சறுக்கு நாலேணியில்,

---

* இது ஷேக்ஸ்பியர் மகாகவி இயற்றிய King Henry IV என்னும் நாடகத்தின் இரண்டாவது பாகம் 3-வது அங்கம் முதற் காட்சியினின்றும் மொழி பெயர்க்கப்பட்டது.

1. வெருட்டியது—பயமுறுத்தியது. 2. பாயல்—படுக்கை. 3. அமளி—படுக்கை. 4. எச்சரித்திடும் மணி—Alarm Bell.

1 நடுவன் எழுப்பிடும் நாதமே போன்று
காதடைத் திடுபெருங் கம்பலை யுடனே
தூக்கிச் சொருகிடும் தாக்கும் 2 வளிதனின்
ஆக்கினைக் கெல்லாம் அவன் உள்ளாகியும்
ஆட்டிக் குலுக்கி அமர்ந்திடச் செய்வையே
சமநிலை தன்னிற் சார்ந்திடத் துயிலே!
அச்சம் விளைத்திடும் அந்நேரத்திலும்
பனி மழைநீரினில் நனை 3 மாலுமிக்கு
ஆறுதல் அளித்தெலாம் அடங்கிய நடுநிசிப்
போதினில் சுகந்தர ஏதுவாயுள்ள
வசதிகள் யாவும் வாய்த்து மன்னவற்கு நீ
சயனப் பேறு தராதது சரியோ?
மகுடம் தரித்திடும மன்னவர்க் 4 கின்னலாம்
ஆதலின், தாழ்நிலை அடைந்துளீர்! நீவிரே
மேதகு சுகத்துயில மிகமேவுதிரே.

M. கோபாலகிருஷ்ணையர்.
அக்ராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.
&
Asst. Master A. M. High School, Madura.

ஜகத்ஜோதி.

[முன் தொடர்ச்சி]

அச்சிங்காரவன மத்தியில் பல அரண்மனைகள் சமைக்கப் பட்டிருந்தன. தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு அவை ஒரு பெருவட்டம்போல் தோன்றும். அவைகளில் பல உத்தம இலக்ஷணக் கன்னிகைகளும் இராஜவமிசத்தைச் சார்ந்த சிறுவர்களும் கல்வி பயிற்றப்பட்டு வந்தார்கள். அக்கட்டிடங்களில் ஒன்று வித்தியாசாலையாகவும் ஒன்று புத்தகசாலையாகவும், ஒன்று சித்திரசாலையாகவும், மற்றொன்று நாட்டியசாலை

1. நடுவன்—எமன். 2. வளி—காற்று. 3. மாலுமி—கப்பலோட்டி. 4. இன்னல்—துன்பம்.

யாகவும், வேறொன்று கைத்தொழிற்சாலையாகவும் விளங்கிற்று. சிறுவர் சிறுமிகள் ஒருவரையொருவர் கண்ணுறாவண்ணம் தனித்தனிக் கட்டிடங்கள் மிக்க புத்தி சாதுரியத்துடன் அமைக்கப் பட்டிருந்தன. வித்தியாசாலையில் காவ்ய நாடக அலங்காரங்களும் நீதி நூல்களும் ஞான நூல்களும் மத சம்பந்தமான நூல்களும் முதிர்ந்த ஞானமுள்ள பண்டிதர்களால் இருபாலார்க்கும் கற்பிக்கப்பட்டன.

புத்தகசாலையில் கடிதம்போன்ற தோல்களில் எழுதப்பட்ட பல புத்தகங்கள் அடுக்கலமாரிகளில் வரிசை வரிசையாய் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. கல்வியில் ஊக்கமுடையோர் ஆங்குச்சென்று வேண்டும் பிரபந்தங்களை வாங்கிக்கொண்டு ஆங்கு அமைக்கப்பட்டிருந்த அழகிய பளிங்கு ஆசனங்களில் உட்கார்ந்து ஆராய்ச்சி செய்வார்கள். ஆ! ஆ! அறிவின் ஆநந்தமே ஆநந்தம். அதற்குமேலான ஆநந்தமும் இவ்வுலகில் உண்டோ. சரஸ்வதி தேவி ஆங்கு சதாகாலமும் நிர்த்தனம்பண்ணிக்கொண்டிருந்ததால் அறிவிலிகளும் அவ்விடத்தில் சிறிது நேரம் சென்றிருக்கும்பட்சத்தில் பேரறிவைப்பெறுவது வழக்கம். போஜராஜன் சபையின் கட் சென்றவர்கள் அவ்வாறான அறிவை ஒரு முகூர்த்த காலம் அடைந்துவந்ததாக நாம் கேட்டதில்லையா? சரஸ்வதி கடாக்ஷத்தாலன்றோ இவ்வுலகமே ஜீவிக்கின்றது. அஃது இல்லாநாகரீகம் எது? சிறப்பேது? செல்வமேது? எவ்வித அற்புதச் சிருஷ்டிக்கும் அக்கடாக்ஷமன்றோகாரணம். அதனாலன்றோ சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமாவும் நாவின் கிழத்தியை தன் நாவைவிட் டகலாவண்ணம் அமைத்து வைத்திருக்கின்றனர். "அறிவுடையார் எல்லாமுடையர்" என்று கூறியதும் இவ் வுண்மை பற்றியன்றோ? பொகாராவிலும் இவ்வித அற்புதப் புத்தகசாலைகள் கிடையா. ஆங்குள்ள சித்திர சாலையில் பற்பல தேச சித்திரங்கள் தொகுதி தொகுதியாய்ச் சேமிக்கப்பட்டிருந்தன. சகல ஜீவராசிகளின் உருவங்களும் ஆங்கு காணக் கூடியனவா யிருந்தமையால் அவ்விடமே ஒரு தனிப்

பிரபஞ்சமாகத் தோற்றிற்று. வனங்களின் காட்சிக ளெல்லாம் வரிசையாய் விளங்கின. இயற்கைப் பொருள்களின் காட்சிகள் இனிமையாய் விளங்கின. நாடு நகரங்களின் காட்சிகள் நலமுடன் விளங்கின. மானுட ஜாதியாரின் காட்சிகள் மாண்பாய் விளங்கின. பக்ஷிவர்க்கங்களின் காட்சிகள் பாங்காய் விளங்கின. "கண்டவர்மனமுங் கண்ணும் கவர்ந்திட வனப்பு வாய்ந்த" அச்சித்திரசாலையின் காக்ஷியைக் கண்ணுற்றே அதன் அருமை பெருமையைப் பாராட்டவேண்டுமே யொழிய சொல்வதால் மட்டும்அறிவது அரிது. நாட்டியசாலையில் சிறுமிகளுக்கு நரைத்தமூதாட்டிகள் பலர் நாட்டியம் பழக்குவார்கள். வீணை முதலிய வாத்தியங்களின் இன்னிசை எச்சமயமும் குடிகொண்டிருக்கும் அம்மாடமாளிகையின் மேன்மாடத்தில் அவ்வின் இசையைக் கேட்கக் கிஞ்சுகப்புட்கள் உலாவின வண்ணமாகவேயிருப்பது வழக்கம். அதனையடுத்த கைத்தொழிற்சாலையில் சரிகைசெய்யும் விதமும், அவைகளை ஆடைகளில் இயைக்கும் விதமும், சால்வைகள் நெய்யும் விதமும் சிலம்பியின் நூலுக்குச்சமமான இழையமைந்த ஆடைகள் நெய்யும் விதமும், பலவர்ணப்பட்டாடைகளில் பற்பலவித பூக்களிழைக்கும் விதமும், அத்தர், பனிநீர் முதலிய வாசனைத்திரவியங்கள் செய்யும் விதமும், சந்தன மரத்தாலும் தந்தத்தாலும் நுட்பமான பல அற்புதச் சிற்பவேலைகள் செய்யும் விதமும் பலவர்ண ஓலைகளாலும் மூங்கிற் பிளப்புக்களாலும் பிரம்புகளாலும் பற்பல விதமான அழகிய பெட்டிகளும் தட்டுக்களும் செய்யும் விதமும் தேர்ச்சியுற்ற பலதொழிலாளர்களால் கற்பிக்கப்பட்டன. கந்தருவ மாதர்களுக்குச் சமமான அப்பூங்கொடிபோல்வாரின் மெல்லிய விரல்களா லிழைக்கப்பட்ட தன்மையினாலேயே அந்நூலிழைகள் மென்மையை அடைந்தனவோவென்றுசந்தேகிக்கக்கூடிய வண்ணம் ஆடைகள் அவ்வளவு நயமாயிருந்தன. இவ்வித ஆடைகளில் பல்லாடைகள் சேர்த்து உடுத்தியிருந்தாலும் ஓராடை உடுத்தியதாகவே தோற்றும். இவைகளுடன் பூத்தொடுக்கும் அரிய கைத்தொழிலும் கற்பிக்கப்பட்டு வந்தது.

இவ்வண்ணம் நிகழ்ந்த இடமாகிய அவ்வரண்மனையின் ஒரு பாகத்தில் ஒரு தனி அறையில் சேர்க்கப்பட்டனள் நம் ஜகத் ஜோதியும். வேண்டிய உண்டி உணவுகள் உதவப் பெற்றனள். வேலைக்காரிகளும் விரும்பினவற்றை உடனே செய்து முடிக்கத் தயாராயிருந்தார்கள். ஆனால் ஜகத்ஜோதிக்கு அவ்விடம் ஒரு பஞ்சரம் போலிருந்தது. உண்டி முதலிய வற்றிற் சிறிதும் உவப்பில்லாதவளாய் ஏங்கிச் சோகமுற்றனள். அருங்கணவனையிழந்து அன்னியன் வசப்பட்ட அவள் மனம் படாத பாடெல்லாம் பட்டுத் தத்தளித்தது. "விதியால் வருவதல்லால் வேதத்தோர் தங்கள் மதியால் வருவதொன்றில்லை." என்ற வண்ணம் விதிவசத்தைக் கடத்தல் எளிதோ. சின்னாட் கழிந்த பின்னர் வழக்கப்படி சிற்ப சித்திரகீத விநோதங்களில் பழகுதல் இனறியமையாததாயிருந்தது.

காலக்கிரமத்தில் துக்கங்களெல்லாம் ஒருவாறு மறைந்தன. ஜகத்ஜோதி தன் புத்தி சாதுரியத்தால் முன்னமே பழகியிருந்த பற்பல அரிய தொழில்களில தீவிரபுத்தியைக்காட்டி அவைகளை விருத்திசெய்யத்தொடங்கினள். பொழுதுபோக்குக்கு வேறு வழியும் கிடையாதவிடத்தில் அவள் வேறு யாது செய்வாள். அவளது அரியகூரிய புத்திக்கு எதுதான் பெரிது. எல்லாத்தொழில்களிலும் நாளடைவில் சிறந்ததேர்ச்சி யடைந்தனள். அவள் கைபட்டது கண்ணாடியாக ஆயிற்று. எவரும் அவள் கைவேலைத் திறமையை வியந்து அவைகளையே பெரும் விலைகொடுத்து வாங்குவது வழக்கம். ஊரெல்லாம் அவள் பேரும் புகழும் பரவத்தொடங்கலாயிற்று. நெடுநாள் இவ்வாறு நிகழ்ந்தன. கடைசியில சக்கரவர்த்தி செவியிலும் இவ் விஷயங்கள் எட்டின. யாது காரணத்தாலேயோ இதுகாறும் உபேக்ஷை செய்த சக்கரவர்த்தி இதைக்கேட்ட மாத்திரத்தில் அவள் பால் அன்புடையவராய் ஆனந்த பாஷ்பம் சொரிந்து தான் செய்த கொடுமையை நினைந்து துக்கித்துப் பலவாருகப் பிரலாபித்தனர்.

[இன்னும் வரும்]

எஸ். சாமிநாதையர்.

ஸ்ரீ சிருங்கேரி மடம் ஆஸ்திக மதோஜ்ஜீவிநீ சபை.

(1) சகலலோக மாதாவாகிய சரஸ்வதியே! நாஸ்திகமென்னும் ஜலம் நிறைந்த இக்கலி யென்னும் பெயர்கொண்ட பெருங்கடலில், கலித்தொடக்கத்திலேயே விழுந்துபோன நமது ஆஸ்திகமென்னும் வெகு சிறந்த மணியானது இதுவரையிலும் எங்களுக்குக் கிடைக்கவேயில்லை. அதுவே எமதுயிர்க்கு அருமருந்தாயிருக்கின்றது. ஆகையின், கருணையோடு கூடிய உன கடைக்கண்ணால் அனைத்திலும் சிறந்த அந்த ஆஸ்திகமணியை எடுத்துத் தந்து எம்மைக் கடைத்தேற்ற வேண்டுமென்று பிரார்த்திப்போம்.

(2) ஓ வாணியே! மன்றகளிலும், மறைமுடிவாக்கியங்களிலும், சுருதிப்பொருள் விளக்கும் ஸ்மிருதி முதலியவைகளிலும், உறுதியான சிரத்தை எங்களுக்குண்டாக வருள்வாயாக. அவ்வுறுதியான நம்பிக்கையே சமுசாரக்கடலில் மூழ்கியிருக்கும் எம்மை கரையேற்றுவதாயும், அறம் முதலிய நால்வகைப் புருஷார்த்தங்களையும் தருவதில், கல்பதருவைப் போலும், உன் திருவடித்தாமரைகளில் பக்தியை விருத்தி செய்வதில் பெற்ற தாய் போலவும், விளக்கிக்கொண்டிருக்கின்றது.

(3) ஓ! இந்திய மகாஜனங்களே! கலியாரம்பத்தில் அக் கலி வைபவத்தால், வேதத்திற்கூறிய நல்வழி பரம்பரையானது உலகத்தில் சிதைந்துவர, அதைக்கண்டு விசனமுள்ள முதன்மையான தேவதைகள், நேராய் பரமேசுவரனை வேண்டிக்கொள்ள, அந்த பரமேசுவரன் நான்கு சீஷருடன் கூடினவராய், ஸ்ரீ சங்கராசாரிய ரூபமாய், பூமியில் அவதரித்து எந்தப்பாரதியைச்சிருங்காசலத்தில் நிலைநிறுத்திப் பூஜித்தனரோ, அந்நாமகள் தேவியார், நம்மெல்லோருக்கும் நன்மை புரிவாராக.

விளம்பரம்

“இப்போதைக்குச் சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பௌத்தம், சார்வாக முதலிய மதங்களால், இவ்வவனிமுழுவதும் கவரப்பட்டு, சுருதி ஸ்மிருதி, முதலியவற்றால் விதிக்கப்பட்ட சத்கரும சதாசாரங்கள் அற்றுப் போகவே, இந்திரோ பேந்திரரே யாதியாய், அமரர்களால் பிரார்த்திக்கப்பட்ட கைலாசவாசியும், உமைபாகனுமான பரமேசுவரன் விண்ணோர்களுக்கபயமீந்து, தக்க உபாயம் நினைந்து, இப்பூமியில் கேரளதேசத்தில், காலடி என்ற அக்கிரஹாரத்தில், புலவர் சிகாமணியும் தொன்டரிற்சிறந்தோரும், விப்பிரவரருமான சிவகுரு என்பவருக்குப் புத்திரனாய்

அவதரித்து எட்டாம் பிராயத்தில் கருமஜாலத்தையகன்று, பரமஹம்ஸ நிலையை மேற்கொண்டு, கோவிந்த பகவனின்றும் மகாவாக்கியோபதேசம் பெற்று, பிரம்ஹ ஸூத்திரங்களுக்கும் உபநிஷத்துக்களுக்கும் பாஷியமியற்றி, கருமபூமியையெல்லாம் சுற்றிச் சஞ்சரித்து, அங்கங்குள்ள துர்மதம் புகுந்த மானுடரனைவரையும் வாதத்தில் வென்று, சுருதியையனுசரித்த தமது அத்துவைதத்தைப் பரவச்செய்து, அதைக்காப்பாற்றச் சதுரரான நால்வர் சீடர்களை நாற்றிசைகளிலும் நிலைநிறுத்திக் கடையில் தமது சொந்த பதவியையடைந்தனர்'' என்ற இப்புண்ணிய சரிதமானது சர்வக்ஞரான வித்தியாரண்ணிய முனிவரர் முதலியோரால் இயற்றப்பெற்ற சங்கரவிஜயாதி கிரந்தங்களினால் இளைஞர் முதல் முதியோர் ஈறாக அனைவருக்கும் நன்கு விளங்கிய விஷயமே.

இவ்வாறிருக்கினும், இக்காலத்திந்தியரான நமது துரதிருஷ்டத்தினால், மகாபாவியான கலிபுருஷன் என்ற அரசனானவன் தௌர்பாக்கியமென்ற மந்திரியின் ஆலோசனைக்கெம்மை யுட்படுத்திச், சுற்றிலும்சூழ்ந்து கொண்டு நமக்குப் பரம்பரையாய்வந்த பக்தி, சிரத்தைமுதலிய பிரதானிகளால் அலங்கரிக்கப்பட்ட ஆஸ்திகம் என்னும் அரசுரிமையைத் தன்வசம் கொண்டு, நம்மில் ஒவ்வொருவரையும், நள்ளிருள் மூடிய நாஸ்திகச் சிறையில் வீழ்த்தி, ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு கிராமத்திலும், வெகு ஆரவாரத்துடன் விருத்தி யடைந்து கொண்டிருக்கிறான். சிறையடைந்த நாமும் கூடச் சகாயமற்று, இவ்வெதிரியை வெல்லத்தக்க சூழ்ச்சியை எஞ்ஞான்றும் கருதிலராய், மயக்கமுற்றுளேம்.

“ஐயோ! அற்ப புத்தியுள்ள இந்தியரே! நமக்கேனிந்தப் பேதமை? நித்திரையொழிந் தெழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! மகா ஜனங்கள் கூடிய நமக்கெது பெரிது? எது அசாத்தியம் ஆம்? எம்மாற்றானுய கலியன்றோ உதவியிலான்?'' என்ற இது முதலானவற்றை வெகுகாலம் ஆலோசித்தவராயும், ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரிய பரம்பரையில் எழுந்தருளி யிருப்போராயும், எக்கணமும் உலகநன்மையை நாடுபவராயும், உள்ள நமது ஆசாரிய பகவத்பாதரால், “ஆஸ்திக மதோஜ்ஜீவிநீ” என்றஓர் சபையானது, ஸ்ரீ சிருங்கேரியில், சகலலோக மாதாவும், சகலகலைகளின் உருவமும் ஆய், அத்துவைதாசாரியரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சாரதாம்பிகை சந்நிதியில், சென்ற குரோதி வருஷம், வசந்தருது, சுக்கிலபக்ஷ, சதுர்த்தி, குருவாரத்தில், சுபலக்கின, சுபமுகூர்த்தத்தில், ஸ்தாபிக்கப்பட்டது.

ஷை சபையில் வருடந்தோறும், ஸ்ரீ சங்கராசாரிய ஜயந்திமகோத்ஸவ காலத்தில், பூர்வ உத்தர மீமாம்ஸைகளிலும், அவற்றின் பொருளிலும் சுருதி, ஸ்மிருதிகளிலும் ஜனங்கள் தத்தம் சக்தியை யனுசரித்து, பரீ

க்ஷிக்கப்படுவார்கள். ஷை பரீக்ஷைகளில் தேர்ந்த பண்டிதர்கள், தருமபோதனை புரிய, தேசமெங்கும் அனுப்பப்படுவார்கள். மேலும் ஷை சபையில் நன்மை யடைவதில் ஜனங்களுக்குள்ள பிரதிகூலங்கள் விசாரிக்கப்பட்டு சாத்தியமான வரையிலும், அவற்றின் சுவபாவத்தை அனுசரித்து, பிரதிக்கிரியை செய்யப்படும்.

நம் ஆசாரியரால் சங்கல்பிக்கப்பட்ட இவ் விஷயத்தையெல்லாம் அறிந்து, ஆன்ற அளவு ஆவலுடனும் உற்சாகத்துடனும் முயன்று, பரம்பரையாய் வந்து நித்தியானந்தம் தரும் ஆஸ்திகமென்ற அரசுரிமையைச் சம்பாதித்து, மகா ஜனங்களெல்லோரும் தம்மைக் கிருதார்த்தர்களாக்கிக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

சிருங்கேரி
1905௵
எப்பிரல்௴ 17௳

ஸ்ரீ சிருங்கேரி மடம்,
ஏஜென்ட்.

சிவஞானயோகிகளது திருநக்ஷத்திர மகோற்சவம்.

சைவசமயாசாரிய சுவாமிகளால் சிவலோகமாமெனச் சிறப்பித் தருளப்பெற்ற தென்பாண்டி நாட்டிலே பொதிய மலைச்சார்பிலுள்ள விக்கிரமசிங்கபுரமென்ற திருநகரத்தில்பரம்பரைச்சைவவேளாளர்குலத்திலே அகஸ்திய முனிவர் வரத்தால் இற்றைக்கு நூற்றெழுபத்து நான்கு வருடங்கட்கு முன் திருவவதாரஞ் செய்து முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத் திருநாமம் பெற்று வளர்ந்து "நரைவரும் என்றெண்ணி நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார்" என்றவண்ணம் பாலியத்திலே திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்து ஆங்கு இரண்டாவது குருமூர்த்திகளா யெழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ வேலப்பதேசிக சுவாமிகளிடத்தே சைவ சந்நியாசமும், சிவதீக்ஷையும், சிவஞானயோகிஎன்ற தீக்ஷாநாமமும்பெற்று வடமொழி தென்மொழி மாப்பெருங் கடல்களின் நிலைகண்டெடுத்தருள் நிரை நிரை மணியெனப் பற்பல உயர்பிரபந்தங்களியற்றிச் சைவசித்தாந்தத் தனிப்பெரு நூலாம் சிவஞான போதச் சிற்றுரையுடனே திராவிட மஹா

பாஷியப் பேருரையாதிய பலவும் அருமையின் அருளிய கருணையங்கடலாகிய சிவஞானயோகிகளது திருநக்ஷத்திர மகோற்சவம் சென்ற சித்திரைமீ 30உ சுக்கிரவாரம் ஆயிலிய நக்ஷத்திரத்தன்று நம் திருவாலவாய் க்ஷேத்திரத்தின் ஆடிவீதியின் தென்புறத்திலுள்ள பக்த பஜனைமடத்தில் கூடிய சைவப்பிரகாச சபையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரராள் முதலிய மூர்த்திகளுக்கும் 63 நாயன்மார்களுக்கும் அபிஷேக அர்ச்சனாதிகள் நடந்தன. பகலில் அந்தணர் முதலாக அடியார் பலருக்கும் "முந்து முக்கனியின் நானாமுதிரையின் முழுத்த நெய்யிற் செந்தயிர்க் கண்டங்கண்டம் இடையிடை செறிந்த சோறு" என்று பெரியோர் கூறியபடி சம்பிரமமாக அமுதளிக்கப்பட்டது. மாலை 5 மணிக்கு யானை மீது சுவாமியவர்களின் பிரபந்தங்களை வைத்து சித்திரைவீதியைச் சுற்றிப்பவனி நடந்தது. பின்னர் ஸ்ரீபாண்டித்துரை தேவர் அவர்கள் சுவாமிகளது திவ்விய சரித்திரத்தைச் சுருங்கக் கூறிப் பிரசங்கமாரி பொழிந்தார்கள். அடுத்து அவர்களே சுவாமிகள் பேரில் அன்புபெருகி யியற்றிய இரட்டைமணிமாலை பிரபந்தம் வாசிக்கப்பட்டது. இவ் விரண்டினையும் கேட்டு அடியார்கள் அனைவரும் ஆனந்தபரித ரானார்கள்.

பின் இராமநாதபுரம் சமஸ்தான சங்கீதவித்துவான் பிரமஸ்ரீ ஸ்ரீநிவாசையங்கார் அவர்களது பாட்டு 1½-மணி நேரம் நடந்தது. எல்லோரும் பரவசமடைந்தார்கள். இம் மகோற்சவம் இத்துணைச் சிறப்புடன் நடக்கும் வண்ணம் பேருதவி புரிந்த திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானத்துக்கும் திருப்பெருந்துறைக் கட்டளை ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்கத் தம்பிரானவர்களுக்கும் ஸ்ரீமான் பாண்டித்துரைசாமித் தேவர் அவர்களுக்கும் முறையூர் ஸ்ரீமான் பழ. சி. ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கும் ஏனைய கனவான்களுக்கும் சிவனடியார்கள் யாவரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இச் சமயம் சென்னை அன்னதான சமாஜத்துக்கு ரூ 20 அனுப்பப்பட்டதுடன் விக்கிரமசிங்கபுரத்தில் சுவாமி அவர்களது திருவுருவத்துக்கு அபிஷேக அர்ச்சனாதிகள் சிறப்புடன் நடத்தப்பெற்றன.

இவ்விஷயத்தில் அல்லும் பகலும் ஊக்கத்துட னுழைத்த சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை பிரமஸ்ரீ சுந்தரேசுவர ஐயர் அவர்களுக்குச் சிவபெருமான் அருளால் செல்வமும் சிறப்பும் பெருகக் கடவன. சுபம். சுபம்.

பத்திராதிபர்.

சைவபரிபாஷை

[முன் தொடர்ச்சி]

(க) பக்ஷமில்லாதது. (உ) பக்ஷ தர்மத்துவ மில்லாதது. (ரு) இரண்டுமில்லாதது. (சு) இரண்டு மிருந்தும் வியாப்தியில்லாதது என்ப. இவற்றிற்கு முறையே உதாரணங்களாவன. ஆகாச புஷ்பம் வாசனையுள்ளது, ஸ்பஷ்டமாதலால் இவ்விடத்துப் பக்ஷமேயில்லை. ஆத்மா அநித்தியம் அணுரூபமாதலால், இவ்விடத்து ஹேதுவுக்குப் பக்ஷதர்மத்துவ மில்லை. முயற்கொம்பு வாசனையுள்ளது, பிருதிவியாதலால இவ்விடத்து இரண்டுமில்லை. பிருதிவி நித்தியம் கண்ணுக்குத் தெரிகின்றமையால் இவ்விடத்து இரண்டுமிருந்தும் சாத்திய ஹேதுக்களுக்கு வியாப்தியில்லை. இந்தப் பக்ஷாபாசங்கள் ஆசிரயாசித்த ஸ்வரூபாசித்த வியாப்பியத்துவாசித்தங்களி லடங்கு மாதலால் இங்கே தனியாகக் காட்டப்படவில்லை.

மேல் திருஷ்டாந்தா பாசங்கள்.

அவை பொருட் குற்றம் சொற் குற்றம் இவற்றுல் இரண்டு விதங்களாகும். அவற்றுள் பொருட் குற்றங்களாவன. அன்னுவய திருஷ்டாந்தத்தில் சாத்திய மின்மை, சாதன மின்மை, இரண்டு மின்மை, ஸ்வரூ மின்மை என நான்காம். வியதிரேக திருஷ்டாந்தத்தில் சாத்தியபாவ மின்மை, சாதனுபாவ மின்மை, இரண்டின்பாவ மின்மை, ஆசிரயாபாவ மின்மை என நான்காம்.

உதாரணங்கள். விசுவம், காரியம், பிரத்தியக்ஷ மாதலால் அன்னுவயத்தாலும் வியதிரேகத்தாலும் ஆத்மாவைப்போல அதிருஷ்டத்தைப்போல, மாயயைப்போல, ஆகாசப் பூப்போல என்று எட்டுவகையாம்.

சொற்குற்றங்களாவன:—அன்னுவய வியதிரேக திருஷ்டாந்தங்களை மாற்றிச் சொல்லுதல், அன்னுவய வியதிரேக

வியாப்திகளை மாற்றிச்சொல்லுதல், அவ்விடத்திலேயே சாத்தியசாதனங்களை மாற்றிச்சொல்லுதல், சாத்தியத்தைச் சாதனமாகச்சொல்லுதல், சாதனத்தைச் சாத்தியமாகச்சொல்லுதல் இப்படி அன்னுவயானுமானத்தில் ஐந்துவகை. இப்படியே வியதிரேகானுமானத்திலும் ஐந்துவகை. ஆக பத்துவகை.

உதாரணம்:—மலை நெருப்புள்ளது. புகையினாலேயென்று அன்னுவயப்பிரயோகத்திலே அன்னுவய வியாப்தியைச் சொல்லி மடுவைப்போலென்கை. அதிலேயே வியதிரேக வியாப்தியைச் சொல்லி மகானசத்தைப்போலென்கை. அதிலேயே அன்னுவய வியாப்தியில் எங்கெங்கே நெருப்போ அங்கங்கே புகை மகானசம்போலென்கை. அங்கேயே மலை புகையுள்ளது நெருப்புடைமைபாலென்று சாத்திய மாற்றத்திற்கும் சாதன மாற்றத்திற்கும் திருஷ்டாந்தங் கூறல். இப்படிச் சொற்பொருட்குற்றங்களாலும் அன்னுவய வியதிரேகங்களாலும் திருஷ்டாந்தாபாசங்கள் பதினெட்டுவகையாகும்.

இந்தத்திருஷ்டாந்தாபாசங்கள் தர்க்கசாஸ்திரத்தில் சொல்லாமலிருக்க இங்கெப்படிச்சொன்னதென்னில் அசித்தமுதலான ஹேதுவாபாசங்களில் அடங்குமென்று அவர்கள் வேறாகச்சொல்லவில்லை. இவ்விடத்துச்சைவாகமங்களில் முக்கியமாகமுதலிலெடுத்துச்சொல்லியிருப்பதால் உதாஹரிக்கப்பட்டன. அப்படி பௌஷ்கரத்தில் பிரமாணவசனமிருக்கின்றது. இவற்றின் பிரசங்கவசத்தால் சலஜாதிநிக்கிரகஸ்தானங்கள் நிரூபிக்கின்றோம்.

அவற்றுள் சலலக்ஷணம்:—ஒருபொருளைக்கருதி யுரைத்த சொல்லுக்கு உரைத்தவருக்கிஷ்டமாகாத மற்றொரு பொருளையேற்றித்தூஷித்தல் சலமாகும்.

அது:—வாக்ச்சலம், சாமானியசலம், உபசாரச்சலம், என மூன்று விதமாகும். அவற்றுள் வாக்ச்சலமாவது உரைத்த சொல்லுக்கு வேறு அர்த்தஞ் செய்து தூஷித்தல். எப்படியென்னில் நவகம்பளமுள்ள விவன் ஆட்டிடையன் என்னுமிடத்துப் புதிதென்னுங் கருத்திலுரைத்த நவவென்னுஞ்

சொல்லுக்கு ஒன்பது என்னும் பொருளைக் கொண்டு இவனுக் கேதொன்பது கம்பளி? ஒரு கம்பிளிதானே யிருக்கிறதென்று வாயடியடித்துத் தூஷித்தல்.

சாமான்னிய சலமாவது:—சொன்ன வாக்கியத்தின் கருத்தை மாற்றி மறுத்தல். எப்படி யென்னில் ஓஹோ இவன் பிராமணன் அனுசானன நன்னடையுள்ளவன் என்று எதிரியுரைக்க வாதியானவன் பிராமணனெல்லா நன்னடையு முள்ளவனென்று சொன்னதாகக் கருத்துக்கொண்டு அப்படிச் சொல்லக்கூடாது கெட்ட பிராமணனிடத்தில் நன்னடை யில்லாமையால் என்று கருத்தை மாற்றித் தூஷித்தல்.

உபசாரச்சலமாவது:—உபசாரமாகச் சொல்லப்பட்ட கௌணபதங்கள் அல்லது லக்ஷணாபதங்களுக்கு முக்கியார்த்தமின்மையைக்கொண்டு மறுத்தல் உபசாரச்சலமாகும். எப்படியென்னில் கங்கையிலிடைச்சேரி, சிங்கமாணவகன் என்பது முதலான பதங்களைச் சொல்லுமிடத்துக் கங்கையிலிடைச்சேரி யெப்படி யிருக்கும்? மாணவகனெப்படிச்சிங்கமாவான்? என்று மறுத்தல். மேல் சாதி. அஃதாவது—தான் சொன்னதற்குக் கெடுதியான சொல்லைத் தானே சொல்லுதல். அஃது சாதர்மியஸமா, வைதர்மியஸமா என்பது முதலாக அநேகவிதமாகும்.

சாதார்மியஸமையாவது:—சப்தம் அநித்தியம் செய்யப்படுகின்றமையால் என்று தொடக்கத்தில் சொல்லிமுடிவில் இப்படியல்ல இதற்கு ஆகாயத்தோடு ஒப்புண்டென்கை. இது முதலான சாதி பேதங்களைத் தர்க்க நூல் முதலானவற்றில் ஊகித்துக்கொள்ளவேண்டியது.

மேல்நிக்கிரஹஸ்தானங்கள்:—அவையவான குற்றஞ்சொல்லிக்கண்டிக்கக்கூடுமான இடங்களாம். அவை பிரதிஞ்ஞா

ஹானி பிரதிஞ்ஞாந்தரம் முதலாக இருபத்திரண்டு வகைப்படும். அவற்றுள் பிரதிஞ்ஞாஹானியாவது பிரசங்கத்தில் முதல் தான் சொன்ன பக்ஷம் வாக்கியம் முதலானவற்றை முடிவில் விட்டு விடுதலாகும். அது சாத்தியம் சாதனம் பக்ஷம் இவற்றின் விசேஷணங்கள் இவற்றை விடுதல் ஆறுவிதமாகும்.

எப்படியென்னில் சப்தம் அநித்தியம் இந்திரியவிஷயமாதலால் என்றபோது சாமான்னியமும் இந்திரியவிஷயந்தானே அது நித்தியமாயிருக்கிறதே ஆதலால் அனைகாந்திக தோஷமென்னில் ஆனால் சப்தமும் நித்தியமே என்பது சாத்தியப்பிரதிஞ்ஞானியாகும். இது முதலாக நிக்கிரஹஸ்தானங்களை ஊகித்தறிந்து கொள்ளவேண்டியது.

மேல் சப்தப்பிரமாணம்.

ஆப்த வாக்கியமென சப்தம் பிரமாணமாகும். ஆப்தனாவது உண்மையறிந்தவன். உண்மையுரைக்கும் புருடன். அவன் வாக்கியமாவது ஆகாமக்ஷை யோக்கியதை சந்நிதி யுள்ள பதங்களின் கூட்டம். ஆகையால் கடம் கர்மத்துவம் கொண்டு வருகை முயற்சி யென்று ஆகாமக்ஷையில்லாத வாக்கியமும், நெருப்பினால் நனைக்கிறானென்று யோக்கியதை யில்லாத வாக்கியமும், இடையில் விட்டுச் சொன்ன காமனய என்னும் சந்நிதியில்லாத வாக்கியமும் பிரமாண வாக்கியமாகவுமாட்டாது.

ஆகாமக்ஷவாவது அறிந்து கொள்பவன் அறிய வேண்டிய இச்சை. யோக்கியதையாவது பொருந்தா தென்னும் நிச்சயமின்மை. சந்நிதியாவது இடைவிடாமல் பொருள் தோற்றுவது. ஆதலால் ஆகாமக்ஷயோக்கியதை சந்நிதியுள்ள பதங்களின் கூட்டம் வாக்கியமாகும்.

[இன்னும் வரும்]